# கீதாசார்யன்



வைகுண்டப்பெருமாள்

# அன்புள்ள வாசகரே!

ஒரு பத்திரிகையின் வளர்ச்சிக்குக் காரணமாக அமைவது அதன் சிறந்த நிர்வாகமும், சீரியதரமுமே. இவ்விரண்டும் இரண்டு கண்கள் போன்றவை. கீதாசார்யனைப் பொறுத்த மட்டில் நிர்வாகம் சீரிய முறையில் இயங்க இயக்குனர் குழு ஒன்று அமைக்கப்பட்டது குறித்து, சென்ற இதழில் அறிவித்திருந்தோம்.

இனி நாம் கவனிக்க வேண்டியது அதன் தரத்தைப் பற்றியது. ஒரு குறிப்பிட்ட ஸம்ப்ரதாயத்தைப்பற்றி நடத்தப்படும் பத்ரிகை, வாசகர்கள் அனைவரையும் கவரக்கூடிய வகையில் சுவையாக அமைய வேண்டுமானால் அது எளிதான காரியமல்ல: இது ஒருவரால் மட்டுமே ஆகக் கூடிய காரியமுமல்ல.

எனவே, இப்பத்ரிகை பழமையிலிருந்து விலகாமலும் பல புதுமைகளைப் புகுத்தியும், மேலும் சுவைபட விளங்குவதற்குச் சிறந்த ஆலோசனைகளை, ஆசிரியருக்கும், இயக்குனர் குழுவுக்கும் வழங்க ஓர் ஆலோசனைக்குழு இருத்தல் அவசியம். அதன்படி, பத்ரிகைத்துறையில் ஜாம்பவானாக விளங்கும் திரு **சாண்டில்யன்** அவர்களது தலைமையில் பேராசிரியர் Dr. V. V. ராமாநுஜம், K. R. ஸ்ரீனிவாஸாசாரியார், S வெங்கடகிருஷ்ண பட்டாச்சாரியார, K.E.B. ரங்கராஜன் ஆகியோரைக் கொண்ட ஓர் ஆலோசகர் குழு அமைக்கப்பட்டுள்ளது. இவ்வனைவரது திறமையாலும் ஆலோசனைகளாலும் கீதாசார்யன் மேலும் மேலும் பொலிவு பெற உங்கள் ஆதரவினையும் ஆசியையும் கோருகிறோம்.

வெங்கடகிருஷ்ணன்

# முகில்வண்ணன்

எம்பெருமானை ஆழ்வார்கள் முகில்வண்ணனென்றும் மேகவண்ணனென்றும் அழைத்து அநுபவிப்பார்கள். கான மேகத்தினுருவம் போன்ற உருவமுடையவன் என்கிற

## P.B. அண்ணங்கராசாரியர்

பொருள் தவிர, மேகத்தின் ஸ்வபாவம் போன்ற ஸ்வபாவமுடையவன் என்கிற பொருளும் ஏற்கும். அந்த ஒற்றுமை நயம் பலபடியாக ஈண்டு விவரிக்கப்படுகின்றது.

மேகமானது பெய்யவேண்டுமிடமளவும் சென்று பெய்யும். எம்பெருமானும் * வந்தருளி யென் னெஞ்சிடங் கொண்ட வானவர் கொழுந்தே * மண்மீதுழல்வாய் * என்கிறபடியே தனது அருளை, பொழிய வேண்டுமிடங்களேறச் சென்று வாழுலகினில் பெய்திடுவன்.

மேகமானது மின்னலுள்ள காலம் நீர் நிரம்பப் பெற்றிருக்கும் எம்பெருமானும் மின்னல் போன்ற பிராட்டியோடு கூடியிருக்குங் காலத்திலே அருள் விஞ்சியிருக்கப் பெறுபவன். (* இந்திரயா தடித்வாந் * என்றார் பட்டர்) "இவன் ஸந்நிதியாலே காகம் தலைபெற்றது; அதில்லாமையாலே ராவணன் முடிந்தான்" என்கிற முமுக்ஷுப்படி திவ்ய ஸூக்தி காண்க. "ஆவியைச் சனகன்பெற்ற அன்னத்தை அமிழ்தின் வந்த தேவியைப் பிரிந்தபின்னைத் திகைத்தனை போலுஞ் செய்கை" என்று பெருமானை நோக்கி வாலி கூறினதாகக் கம்பர் பேசியுள்ளதுங் காண்க.

மேகமானது தான் மொண்ட இடத்திலும் பெய்யும். எம்பெருமான் தான் ஞானவெள்ளத்தை மொண்டுகொண்ட

இடத்திலும் உபதேச வெள்ளத்தைப் பெய்திருமவன். விபவாவ தாரத்தில் தனக்கு ஞானமளித்த வஸிஷ்டாதிகளுக்கும் தான் ஞானமளிக்கத் தொடங்கினமை ஸ்ரீராமாயண ப்ரஸித்தம். சித்ரகூடத்திலே வஸிஷ்ட முனிவன் பெருமாள் பக்கலிலே சில தர்ம ஸூக்ஷ்மங்கள் கேட்கப் பெற்றானாயிற்று. *ஸோஹம் தே பிதராசார்ய: தவ சைவ பரந்தப, மம த்வம் வசநம் குர்வந் நாதி வர்த்தேஸ் ஸதாம் கதிம்* என்று செருக்கித் கிளர்ந்த வஸிஷ்டனையும் வாய்மூடுவித்தான் இராமபிரான், சில தரும மருமங்களைச் சொல்லி. அது அயோத்யாகாண்டத் தில் காணத்தக்கது.

மேகமானது பெய்யப்பெறாத காலத்திலே வறக்கும்: எம்பெருமானும் அடியார்களுக்கு அருள் செய்யப்பெறாத காலத்திலே நெஞ்சுலர்ந்து பேசுவன்; த்ரௌபதிக்கு ஆபத்திலே அருகேயிருந்து உதவப்பெறாத குறையினால் * **கோவிந்தேதி யதாக்ரந்தத் க்ருஷ்ணா மாம் தூரவாஸிநம் ருணம் ப்ரவ்ருத்தமிவ மே ஹ்ருதயாத் நாபஸர்ப்பதி*** என்றானே.

மேகமானது இன்னபோது பெய்யுமென்று ஒருவராலும் அறுதியிடவொண்ணாததாயிருக்கும் : பெய்யவேண்டிய காலத் தில் பெய்யாதொழியவும், பெய்வதற்கு ப்ரஸக்தி இல்லாத காலத்தில் எதிர்பாராதவிதமாக வந்து பெய்யவும் கடவது மேகம். எம்பெருமான்படியு மப்படியே [*வந்தாய்போலே வாராதாய் வாராதாய்போல் வருவானே* என்றாரே நம்மாழ் வார்.] த்ரௌபதிக்கு ஆபத்திலேவந்து முகங்காட்டா தொழிந்தான்; அபேக்ஷாநிரபேக்ஷமாகத் * தாவியன்றுலகை மெல்லாம் தலைவிளாக்கொண்டான்.

'வனத்திடரை ஏரியாக வெட்டியாயிற்று, நீ மழை பெய்தாகவேணும்' என்று விளப்பிட வொண்ணாதது மேகம். எம்பெருமான்படியு மப்படியே. 'நாங்கள் கரும, ஞான, பக்தி யோகாதிகளைக் குறைவற அனுட்டித்தாயிற்று. இனி நீ அருள் செய்தே யாகவேணும்' என்று விளப்பிட்டால் அந்த விளாப்புக் காகக் காரியஞ்செய்யுமவனல்லனே எம்பெருமான். *வனத்

திடரை ஏரியாம் வண்ணமியற்று மிதுவல்லால், மாரி யார் பெய்கிற்பார் மற்று* என்றாரே பூதத்தாழ்வார்.

மேகமானது நீர் நிலம் என்று வித்தியாசமில்லாமல் எங்கும் பெய்யும்; எம்பெருமானும், வஸிஷ்டன் சண்டாளன் அறிஞர் அறிவிலிகள் என்னும் வாசியின்றிக்கே* அநாலோசித விசேஷாசேஷ லோகசரண்ய! * என்னும்படியே எங்கும் ஒரு நிகராக அநுக்ரஹஸீலன்.

மேகமானது சில காலங்களிலே கர்ஜித்துப் போய்விடும் பெய்யாது; பெய்யுங்காலத்திலே ஆடம்பரமின்றிக்கே சொரிந் திடும். *கர்ஜதி சரதி ந வர்ஷதி வர்ஷதி வர்ஷாஸு நிஸ்ஸவநோ மேக: * என்றான் பண்டிதராஜன். எம்பெருமான் குசேலனுக்கு அருள் செய்தபடி இங்ஙனமேயாம்.

மேகமானது விராடபர்வ காலக்ஷேபத்திற்கு வந்து நிற்கும். [விராட பருவம் பாராயணம் செய்தால் மழை பெய்யுமென்பது ப்ரஸித்தமன்றோ]. எம்பெருமான் பகவத் விஷய காலக்ஷேபங்களிலே வந்து நிற்பன். மணவாளமாமுனி களின் ஈடு காலக்ஷேப கோஷ்டியிலே* ஸ்ரீசைலேச தயாபாத்ர மென்று கர்ஜித்துக்கொண்டு வந்ததன்றோ ஸ்ரீரங்கநாதனென்கிற காளமேகம்.

மேகமானது சிப்பிகளிற் பெய்து முத்தாக்கும் * அடியார்க்கு இன்பமாரியாகிய எம்பெருமானுடைய கடாக்ஷ தாரையும் ஆழ்வாராசார்யர்களிடத்தே ப்ரவஹித்து மிக்க பயன் விளைந்து முத்தன்ன வாக்குகளைப் பயந்ததன்றோ.

மேகமானது * மேகத்தை வேங்கடக்கோன் விடு தூதில் விண்ணப்பம் * இத்யாதிப்படியே தூதுவிடப்பெறும். எம்பெருமான்தானும் * இன்னார் தூதனென நின்றான்; * கோதை வேல்வர்க்காய் மண்ணகலங் கூறிடுவான் தூதனாய் மன்னவனால் சொல்லுண்டான். பாண்டவ! தூதனென்றே அழியாத பேர்பெற்றுத் திருப்பாடகத்தில் விளங்காநின்றானே

மேகமானது மழைபெய்து சிலர்க்குத் தீங்கை விளைக்கும், சிலர்க்கு நன்மைபயக்கும். மழைபெய்ய எல்லா மரங்களும்

தளிர்க்கும்; எருக்கிலே போல்வன விழ்ந்தொழியும். ஆகவே மழை சிலர்க்குத் தீங்கு, சிலர்க்கு நன்மை. எம்பெருமான்படியு மப்படியே. * **பரித்ராணய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம்** * என்று தானே சோதிவாய்திறந்து பணித்தபடி நல்லவர்களுக்கு நன்மையும் தீயவர்களுக்குத் தீங்கும் ஏற்படுகிறது பகவானுடைய அவதாரத்தாலே.

மேகமானது, * எத்தனையும் வான்மறந்த காலத்தும் பைங்கூழ்கள் மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்குமென்கிற படியே பயிர்கள் வேறு புகலற்று எதிர்பார்க்கப் பெற்றிருக்கும். எம்பெருமானும் *களைவாய்துன்பம் களையாதொழிவாய் களைகண் மற்றிலேன்* என்று சாதகப் பறவை போன்ற அநந்யகதிகளால் எதிர்பார்க்கப்பட்டிருப்பன்.

மேகமானது விருப்பமில்லாதவன்று எத்தனை கண்ணைநீர் விழவிட்டாலும் வாளாகிடக்கும்; எம்பெருமான்படியுமிதுவே. பரதாழ்வான் பலருடனே சித்ர கூடத்திலே போந்து கண்ண நீரை விழவிட்டு வேண்டினவிடத்தும் * ஸ காமம் அநவாப்யைவ* என்னும்படியே மநோரதம் நிறைவேறப் பெறுமலே மீண்டு போம்படியாயிற்றன்றோ.

மேகமானது கடலிற்படிந்து அங்கு நின்றும் எழுந்து தோன்றி வர்ஷித்துவிட்டு மீண்டும் கடலிற்புகும்; எம்பெருமா னும் அவதாரகந்தமான திருப்பாற்கடலிலே படிந்து ஸ்ரீராம க்ருஷ்ணாதி ரூபேண தோன்றிக் கண்காணவந்து க்ருபா ரஸத்தை வர்ஷித்துவிட்டு மீண்டுமங்கே புகுவன்.

மேகமானது தான் தோன்றினவாறே மயில்களைச் சிறகு விரித்து ஆடப்பண்ணும். *கார்முகில்போல் வண்ணன் கண்ணனெம்மானைச் சொல்லிப்பாடியெழுந்தும் பறந்தும் துள்ளாதார் தம்மால் கருமமென்சொல்லீர் * என்கிற திருவாய்மொழியின் படியே எம்பெருமானைக் கண்டமாத்திரத் திலே பக்தர்கள் எழுந்தும் பறந்தும் துள்ளுவர்கள்.

# பரமேச்சுர விண்ணகரம்

**பேரும் பல பலவே :** பகவானுக்குப் பல பெயர்களுண்டு. அவற்றுள் மேன்மையைக் குறிக்கும் பெயர்களும் இருக்கின்றன; நீர்மையைக் குறிக்கும் பெயர்களும் இருக்கின்றன. ஸ்ரீநாத, நாராயண...என்று தொடங்கி இருபது திருநாமங்களைக் குலசேகராழ்வார் குறிப்பிடுகிறார். எம்பெருமானின் திருநாமங்களுள் ஒன்றைச் சொன்னாலும் போதும்; பாவங்கள் தொலையும். எவரும் சொல்லுவதில்லை; சொல்வதற்குத் தகுதிகள் படைத்திருந்தும் சொல்வதில்லையே! மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் இந்நிலையை என்னவென்று சொல்லுவது! என்று நிலைகுலைந்து நிற்கிறார். பகவானின் திருநாமங்கள் பணிப்பொன் போன்றவை 'கண்ணனே எல்லாம்' என்றிருக்கும் ஓர் ஆயர் மகளை எழுப்பப் பகவானின் திருநாமங்களைக் கூற வேண்டுமாம்! பகவானுக்கு ஸ்ரீபாதம் போல் இவளுக்கு

## ஸ்தலசயனத்துறைவார்

அவனது திருநாமங்கள்! 'மாமாயன்! மாதவன்! வைகுந்தன்!' என்று இப்படிப் பல திருநாமங்களைச் சொல்லுங்கள்; என்கிறாள் பெண்ணின் தாய்! 'வைகுந்தன்' என்பது பகவானின் மேன்மையைக் குறிக்கும் சொல். வைகுந்தன், வைகுண்டப் பெருமான், பரமபதநாதன் என்ற பெயர்களைத் தாங்கி அர்ச்சாவதார எம்பெருமான்கள் எழுந்தருளி இருக்கும் இடங்கள் சிலவே உள்ளன (பெரிய) காஞ்சிபுரத்தில் வைகுண்டப் பெருமாள் எழுந்தருளி இருக்கிறார்.

**ஆரே அறிவார் அவன் நோக்கம்!** வைகுந்தப் பெருமாள் ஸ்ரீவைகுண்டத்தில் இருக்கும் திருக் கோலத்துடன் இங்கு எழுந்தருளி இருப்பது நமக்காகவே! வைகுந்த நாதன் நமக்கு எட்டாதவன்; அவனை அடையவும் முடியாது; அடைந்து அவ

னுக்குத் தொண்டு செய்யவும் முடியாது என்று அனைவரும் அறிந்த உண்மை! ஆண்டாளும் 'வைகுந்தன் என்பதோர் தோணி பெறாது உழல்கின்றேன்' என்றாள் மக்களுக்கு ஏற்பட்டு இருக்கும் இந்த எண்ணத்தை மாற்றி வைகுந்த நாதனும் ஸர்வசுலபன்; மிகவும் எளிமையானவன் என்பதை உணர்த்துவதற்காகவே பெரிய காஞ்சிபுரத்திற்கு வந்து எழுந்தருளி இருக்கிறானே! முக்திதரும் நகரேழில் முக்கியமாம் காஞ்சி இவன் எழுந்தருளிய பிறகே மோக்ஷம் கொடுக்கும் வல்லமையை பெற்றதோ!

**இயல் சாற்று கேட்டருளும் பெருமாள் :** ஸ்ரீதேவப் பெருமாளின் வைகாசிப் பெருவிழாவின் பெருமை அளவு கடந்தது. பூமியிலுள்ளோர் அனைவரும் இதனை நன்கு அறிவர். ஆனால், வானுலகில் (மேலுலகில்) உள்ளோர் இவ் விழாவின் சிறப்பை வந்து காண இயலாது! வந்து ஸேவித்தவர்கள் மீண்டும் (தம் உலகம்) தம் இருப்பிடம் செல்ல விரும்ப மாட்டார்கள். வைகுந்த நாதனும் ஸ்ரீதேவப் பெருமாளின் மகோத்ஸவத்தை ஸேவித்துப் பிரிந்து செல்ல மனமில்லாமல் காஞ்சி ராஜவீதியிலேயே தங்கி விட்டான் போலும்! ஸ்ரீவைகுண்டத்தில் எப்போதும் ஸாம கானத்தைக் கேட்டுக் கேட்டு அலுப்படைந்து இங்கு வந்து அருளிச்செயலையும், இயல் சாற்றையும் கேட்டு மகிழ்கிறான் போலும்! வைகுண்டப் பெருமானுக்கு அன்றோ இயல் சாற்று கேட்கும் பாக்கியம் கிடைத்துள்ளது! இப்படிப் பட்ட பெருமையைப் பெற்றவர் வைகுண்டப் பெருமாள் ஒருவரே;

**பல்லவர்கோன் பணிந்த பரமேச்சுர விண்ணகரம் :—** பல்லவ அரசன் இந்த எம்பெருமானிடம் மிகவும் ஈடுபட்டு இவருக்குப் பல திருப்பணிகளைச் செய்திருக்கிறான் முற்காலத்தில் பல்லவன் என்றும் வில்லவன் என்றும் பெருவலிமை பெற்ற அரசர்கள் இருந்தார்கள். அவர்களால் வணங்கப்படு கிறவன் இப்பல்லவ அரசன் இவன் (மாமல்லபுரத்தை) திருக்கடல்மல்லையைப் படை வீடாகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்தான்: இதனால் மல்லையர்கோன் எனப்பட்டான்.

திருமங்கையாழ்வார், எம்பெருமானுக்குத் தொண்டு புரிந்த அரசர்களைச் சில பதிகங்களில் கடைசிப் பாசுரத்தால் புகழ்வார். ஆனால், இந்தத் திவ்விய தேசத்தைக் கூறும் பத்துப் பாசுரங்களிலும் மல்லையர்கோனைப் புகழ்ந்திருக்கிறார்! இதிலிருந்தே இவனது அளவு கடந்த கைங்கர்யங்களை நாம் அறியலாம். சிற்பங்கள் நிறைந்து எழில் மிகுந்து தோற்ற மளிக்கும் ஸ்ரீவைகுண்டப் பெருமான் ஸன்னிதி பல்லவ அரசர்களின் பெருமைகளை உணர்த்திக் கொண்டே இருக்கிறது!

**கடுவாய்ப்பறையுடைப் பல்லவர் கோன்:** போர்க்களத்தில் பகைவர்களோடு போரிட்டு அவர்களை வெல்கிறவனே அரசர் கோமானாக இருக்க முடியும். இப்படிப் பட்டவன் மல்லையர்கோன். இவனிடம் ஒரு போர்ப்பறை இருந்ததாம். இதை ஒலித்தால் கடலோசை, இடியோசை போன்று அச்சம் தரும் ஒலி கேட்குமாம். துணிவுள்ளவர்களும் இடியோசை கேட்டு அஞ்சுகிறார்களே! 'பல்லவப் பேரரசனை வெல்வேன்' என்று ஆண்மையைப் புகழ்ந்து கொண்டு ஓடி வரும் பகைவர்களும் இப்பறையொலி கேட்டு அஞ்சிப் புறமுதுகு காட்டி ஓடுவார்களாம்! இப்பறைக்குக் 'கடுவாய்ப்பறை' என்று பெயர். கைங்கர்யஸ்ரீயைப் பெற்ற இப் பல்லவ அரசனைக் கூறும் ஆழ்வார் இவனது பறையையும் விடவில்லை! மன்னனின் பெருமை மன்னனுக்கே தெரியும்! அதனால்தான் பல்லவ மன்னனின் பெருமைகளைத் திருமங்கை மன்னன் பரக்கக் கூறியுள்ளார். வலிமை பெற்ற அரசனும் போரினில் வெற்றியடைய பகவானின் அருளைப் பெற்றிருக்க வேண்டும். ஏழு எருதுகளை வென்று நப்பின்னையை ஏற்றுக் கொண்டவனே ஸ்ரீவைகுண்ட நாதன். கடல்போல் முழங்கும் குரல் ஒலியைக் கொண்ட கடுவாய்ப்பறையை யுடைய பல்லவன் இவனை அடிபணிந்து நிற்கிறான்; பகைவர்கள் பகையொழித்து இவனை வணங்கி நிற்கிறார்கள்!

**அடியார்க்கு என்னை ஆட்படுத்திய விமலன்!** எம்பெருமானின் திருவருள் இருந்தால் பேச்சுப்புலனில்லாதவனும் கவி

பாடலாம்! துருவனுக்கு அருள் கொடுத்து ஞானியர்கள் போன்று துதிபாடச் செய்தானே! பட்ட மரமும் தளிர்க்கும் பொன்னருள் அடியார்களுக்கு அடிமைப்பட்ட பிறகே பகவானுக்கு அடிமையாக இருக்க முடியும். இந்த அடிமை அப்போது தான் நிலைத்து நிற்கும்! ஸ்ரீவைகுண்டப் பெருமாளுக்கு 'ஏழை ஏதலன்' என்று என் மீது இரக்கம் ஏற்பட்டது! என்னையும் பயனுள்ள பொருளாக்க எண்ணினன்; தனக்கு அடிமையாக்கிக் கொள்ள விரும்பினன், முதலில் தன்னடியார்க்கு அடிமையாக்கினன். அவர்களுக்கு அடிமை செய்வதில் சுவை ஏற்பட்ட பிறகு தனக்கே அடிமையாக்கிக் கொண்டான்! மறைகளாலும் அளவிட முடியாத தன்னைக் கவிபாடித் துதிக்குமாறு நியமித்தான். அடியேன் சிறிய ஞானத்தன்! என் செய்வேன்!' என்று இரக்கம் தோற்றக் கூறத் தொடங்கினேன்! 'என்னால் தன்னை இன்தமிழ்ப் பாடிய ஈசன்' அல்லனோ அவன்! ஆடியாடி அகம் கரைந்து அவனிசை பாடுங்கள்!

பதத்தமிழாற்றன்னையே பாடுவித் தென்னைத்தன்
பதத்தடியார்க்கே யாட் படுத்தா – விதத்த
பரமேச்சுர விண்ணகரான் பலவான்
வரமேச்சுரலனைந்த மால்

நூற்றெட்டு திருப்பதி அந்தாதி—87

OCEANLINK
Shipchandlers-shipservice engineers & Exporters

★

254, Thambuchetty Street, Ist Floor,
MADRAS-600 001.

Phone : 31348

# நம்மாழ்வார்

'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா'? கீதாசார்யனில் வரும் அதிகப்படியான கட்டுரைகள் சிறுவர்கள் படிக்கும் வண்ணம் சுலபமானதாக இல்லை. சிறு வயது முதலே ஆஸ்திக எண்ணம் வளர்க்கப்பட வேண்டும் நாம் சார்ந் திருக்கும் வைணவத்தைப் பற்றி சிறு வயது முதலே அறிய வேண்டும் எனும் முயற்சியில் தொடங்கப்பட்டதே இத்தொடர்.

---

## ஆழ்வான்

---

**கீதை மாமா :** குழந்தைகளே! வாருங்கள், முதலில் பெருமாளை ஸேவித்து விட்டு உட்காருங்கள். எந்த வேலை யைச் செய்தாலும் பெருமாளை நினைக்காமல் செய்யக் கூடாது.

**ரமேஷ் :** கீதை மாமா, எங்களுக்கு ஒரு நல்ல கதை சொல்லுங்களேன்.

**கீ. மாமா :** உனக்கு நல்ல கதை சொல்லுமுன் உனக்கு ஒரு நல்ல பெயர் வைக்கிறேன். குழந்தைகளே, நாம் எப்பொழுதும் பகவான் பெயர்களையே நமக்கு வைத்துக் கொள்ள வேண்டும். அதனால், நாம் பிறரை பெயர் சொல்லி அழைக்கும் போது, நம்மையும் அறியாமல் பகவான் பெயரைச் சொல்கிறோம். அதனால் நமக்கு நல்ல பலன் கிடைக்குமல்லவா? ஆகவே, இன்று முதல் உனக்கு 'பராங்குசன்' என்று பெயர் வைக்கிறேன்.

**ஆண்டாள் :** என்ன மாமா இது. பகவான் பெயர் என்று சொலலிவிட்டு, 'பராங்குசன்' என்கிறீர்களே! பராங்குசன் என்றால் 'நம்மாழ்வார்' இல்லையா? நம்மாழ்வார் பகவான் இல்லையே!

**கீ. மாமா :** நல்ல கேள்வி, ஆண்டாள். நீ சொல்வது சரியே. பகவான் பெயரைச் சொன்னாலும் சரி, அல்லது அவரை நாலாயிரம் பாட்டுக்களால் பாடிய 'ஆழ்வார்கள்' பெயரைச் சொன்னாலும் பலன் ஒன்றே.

**பக்திசாரன் :** அது எப்படி சரியாகும்? பகவான் என்பவன் ஒருவனே! ஆழ்வார்களும், ஆசார்யர்களும் நம்மைப் போன்ற சாதாரணமானவர்களே. அவர்கள் பெயரைச் சொன்னால்......

**கீ. மாமா :** நீ கேட்பது எனக்குப் புரிகிறது. ஆழ்வார், ஆசார்யர்கள் பெயரைச் சொன்னாலும், பூஜித்தாலும் பகவான் தன்னையே பூஜித்ததாகக் கொண்டு எல்லா நன்மைகளையும் செய்வான்.

**பக்திசாரன் :** இது சரியாகப் படவில்லையே! ஆழ்வார்களைப் பூஜித்தால் ஆழ்வாருக்குச் சந்தோஷமாக இருக்கலாம். அதனால் பகவானுக்கு சந்தோஷம் ஏற்படுமா என்ன?

**கீ. மாமா :** இதை ஏற்கெனவே, பராசர பட்டர் என்பவர் அருமையாக விளக்கியுள்ளார். இதே கேள்வியை ஓர் அரசன் பட்டரிடம் கேட்டான். உடனே பட்டர் அரசனைப் பார்த்து, "தங்களை இந்நாட்டு மக்கள் வணங்கும் போது பெறும் உணர்ச்சி என்ன?" எனக் கேட்டார். அதற்கு அரசன், 'மகிழ்ச்சியடைவேன்' எனக் கூறினான். உடனே பட்டர், "உங்கள் திருவடிகளிலே (கால்களில்) அணியும் பாதரக்ஷைகளை (மிதியடி) மக்கள் வணங்கினால்?" என்று கேட்பதற்குள், 'இரட்டிப்பு மகிழ்ச்சியடைவேன்' என அரசன் பதிலளித்தான். உடனே பட்டர், "இதைத்தான் நானும் கூறினேன். உன் திருவடிகளையே இவ்வளவு புகழ்பவர்கள் உன்னை அதைவிட அதிகமாக புகழ்வார்கள் என எண்ணியே நீ மகிழ்கிறாய். அதே போல்தான் பகவானும், தனது திருவடிகளை வணங்கினாலே தன்னை வணங்கியதாகக் கொள்வான்" எனக் கூறினார். ஆகவே எம்பெருமானின் திருவடி ஆகிய

ஆழ்வார்களை பூஜித்தாலே எம்பெருமான் தன்னை பூஜித்ததாகக் கொள்வான்.

**கோவிந்தன்:** அப்படியானால், ஆழ்வார்களை பெருமாளின் திருவடி என்கிறீர்களோ?

**கீ. மாமா:** அதில் என்ன சந்தேகம்? நீங்கள் கோயிலுக்குச் சென்றால் பெருமாளின் திருவடிகளை 'ஸ்ரீசடகோபன்' என அழைப்பதைப் பார்த்திருப்பீர்களே! சடகோபன் என்றால நம்மாழ்வார். ஆழ்வார்களில் தலைசிறந்தவரான நம்மாழ் வாரின் பெயரே இருக்கிறது.

**எல்லோரும்:** ஆமாம், ஆமாம், நாங்கள் கூட கோயிலுக்குச் செல்லும்போது 'ஸ்ரீசடகோபன்' வாங்காமல் வருவதில்லை.

**கீ. மாமா:** சரி, குழந்தைகளே இன்று முதல் நான் உங்களுக்கு ஆழ்வார் ஆசாரியர்களின் கதையைக் கூறப் போகிறேன்.

**சுதர்ஸனன்:** மாமா, ஒரு சந்தேகம்: ஆழ்வார்கள் என்றால் யார்? ஆசார்யர்கள் என்றால் யார்?

**கீ. மாமா:** பகவானுடைய பெருமையிலே ஆழ்ந்து பக்தியின் மேலீட்டால் நாலாயிரதிவ்ய ப்ரபந்தம் பாடியவா கள் ஆழ்வார்கள்; ஆழ்வார்கள் அருளிய பாட்டுக்களிலுள்ள கொள்கைகளை தம் அறிவால் வளர்த்த ஆசிரியர்கள் ஆசாரியர்கள்; நம்மாழ்வார் முதல் திருமங்கை 'ஆழ்வா வரை, ஆண்டாள் உட்பட பன்னிரண்டு பேர்கள் ஆழ்வார்கள என வழங்கப்படுவர்.

**ஆண்டாள்:** மாமா இன்னும கதையே ஆரம்பிக்க வில்லையே.

**கீ. மாமா:** ஆண்டாள் மிகவும் அவசரப்படுகிறாள். இன்று உங்களுக்கு நம்மாழ்வார் கதையைக் கூறப்போகிறேன்.

**பராங்குசன் :** இன்று தாங்கள் நம்மாழ்வார் கதையைக் கூறுவதற்கு ஏதேனும் காரணம் உண்டா?

**கீ மாமா :** ஆமாம் பராங்குசா! இது வைகாசி மாத மல்லவா? நம்மாழ்வார் வைகாசி மாதம் விசாக நட்சத் திரத்திலேயே அவதரித்தார்.

**பக்திசாரன் :** அவதரித்தார் என்றால் பிறந்தார் என்று தானே பொருள்.

**கீ மாமா :** ஆம். திருநெல்வேலியிலே புண்ய நதிகளில் சிறந்ததான தாமிரபரணியெனும் ஆற்றின் கரையிலே உள்ள திருக்குருகூர் என்ற ஊரில் காரி என்ற ஒரு வேளாளருக்கு உடைய நங்கை என்ற மனைவி இருந்தாள். இவர்களுக்கு நீண்ட நாள் குழந்தையே இல்லாமல் இருந்தது.

**கோவிந்தன் :** குழந்தை இல்லாம இருந்தா பெருமாளை வேண்டிண்டா குழந்தை பிறந்துடுமே!

**கீ மாமா:** நீ சொல்வது ரொம்ப சரி, அவர்களும் திருக் குருகூர் கோயிலுக்கு நித்யம் போய் 'பெருமானே பெருமானே எங்களுக்கு ஒரு குழந்தை வேணும்'னு வேண்டிக் கொண்டனர். திடீரென்று ஒருநாள் பெருமாளும் மனசு இரங்கி இவர்கள் சொப்பனத்திலே வந்து "நானே உங்களுக்குக் குழந்தையாகப் பிறக்கிறேன்" என்று சொல்லிவிட்டு மறைந்து போய் விட்டார். அதன்படியே வைகாசி மாதம் விசாக நக்ஷத் திரத்தில் காரிக்கும் உடைய நங்கைக்கும் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. ஆனால் பாவம், அந்த குழந்தை அழவில்லை, சிரிக்க வில்லை, பாலும் அருந்தவில்லை, ஒன்றுமே செய்யாம கட்டை போல இருந்தது.

**ஆண்டாள் :** என்ன மாமா இது! இவ்வளவு கஷ்டப் பட்டு பிறந்த குழந்தை இப்படி, பிறந்ததிலிருந்து ஒன்றுமே செய்யாமல் மாறுமல் இருந்தது எப்படி சாத்யமாகும்?

கீ. மாமா : ஆண்டான், அவசரப்படாதே! அதனால்தான் அதற்கு 'மாறன்' என்று பெயர் வைத்தார்கள். முன்னாடியே சொன்னபடி, பெருமாளே மாறனாக பிறந்திருந்தபடியால், கொஞ்ச நாளில் சரியாகப் போய்விடும் என்று நம்பியிருந்தனர். ஆனால் அக் குழந்தை அப்படியே இருந்தது. ஆகவே காரியும் உடைய நங்கையும் அக்குழந்தை பிறந்த 12ஆம் நாள் திருக்குருகூர் கோயிலுக்குக் கொண்டு போய் அங்கே வளர்ந்திருந்த ஒரு புளிய மரத்திலே கிடத்தி 'பெருமாளே பார்த்து வளர்க்கட்டும்' என்று மனதை திடப்படுத்திக் கொண்டு சென்று விட்டனர்.

பக்திசாரன் : அப்போ, அந்தக் குழந்தை எவ்வாறு வளர்ந்தது?

கோவிந்தன் : பெருமாளே வந்து அதை காப்பாற்றியிருப்பார் இல்லையா மாமா

கீ மாமா : நீ விளையாட்டாகச் கூறினாலும் உண்மை அதுவே; மாறன் எனும் அக்குழந்தை 16 வருஷ காலம் அப்புளிய மரத்திலேயே வளர்ந்து வந்தது. பெருமாளே அக்குழந்தையைத் தன்னுடைய குழந்தைபோலக் காப்பாற்றி சிறந்த அறிவையும் ஞானத்தையும் ஊட்டினார்.

பக்திசாரன் ! 16 வருஷகாலம் அந்த மரத்திலேயே இருந்தாரே. அவரை ஒருத்தருமே வந்து பார்க்கவில்லையா மாமா?

கீ. மாமா : இரு அவசரப் படாதே, அதைத்தான் சொல்ல வந்தேன். திருக்குருகூருக்கு மேற்கே இரண்டு மைல் தூரத்திலே திருக்கோளூர் என்று ஒரு ஊர், அவ்வூரிலே மதுரகவிகள் என்று ஒரு பிராமணர் இருந்தார். அவர் ஒரு சமயம் திவ்ய தேச யாத்திரையாய் சென்றிருந்த போது திருவயோத்தியில் ஒரு நாள் இரவில் திருக்கோளூர் பெருமாளைச் சேவிக்க எண்ணி, தெற்குத் திசையைப்

பார்க்கும் பொழுது ஆகாயத்திலே ஒரு திவ்யமான ஒளியைக் கண்டார்.

**ஆண்டாள் :** மாமா, மதுரகவிகளும் ஒரு ஆழ்வார் தானே, அல்லது இவர் வேறு?

**கி. மாமா :** மதுரகவிகளும் 12 ஆழ்வார்களுள் ஒருவரே' இன்னும் சொல்லப் போனால், மதுரகவிகள் மட்டும் இல்லை யென்றால் நம்மாழ்வாரின் பெருமையே நாம் அறிந்திருக்க முடியாது. நமக்கு ஆயிரம் இனிய தமிழ்ப்பாட்டுகளும் கிடைத்திருக்காது. இவர் நம்மாழ்வார் மீது 'கண்ணிநுண் சிறுத்தாம்பு' என்று பத்து ப்பாசுரங்கள் பாடியிருக்கிறார், சரி இதைப்பற்றி பிறகு விரிவாகக்கூறுகிறேன். நம்மாழ்வாரின் கதையை எங்கே விட்டோம்?

**கோவிந்தன் :** நான் சொல்கிறேன் மாமா, மதுரகவிகள் ஒரு ஒளியைக் கண்டதாகக் கூறினீர்கள்.

**கி மாமா :** அது எங்கிருந்து வருகிறது என்று தெரிந்து கொள்ள ஆசைப்பட்டு அதைப் பின் தொடர்ந்து சென்றார். அவ்வொளி திருக்குருகூர் புளிய மரத்தில் வந்து மறைந்து விட்டது. அங்கு புளிய மரத்தடியில் பதினாறு வயது பாலகர் ஒருவர் இருப்பதைக் கண்டார்.

**பராங்குசன் :** ஒரு சிறிய சந்தேகம். புளிய மரம், புளிய மரம் என அடிக்கடி சொல்கிறீர்களே, அதற்கு ஏதாவது விசேஷம் உண்டா?

**கி. மாமா :** சிறந்த கேள்வியப்பா இது: நம்மாழ்வார், அதாவது மாறன் பிறக்கப் போகிறார், இம்மதிரி ஜடமாக விருக்கப் போகிறார், அவருக்கு நிழல் தந்து பாதுகாக்க வேண்டும் என்பதற்காகவே ஆதிசேஷனே, புளிய மரமாக அவதரித்துள்ளார். இதில் விசேஷம் என்ன வென்றால், இப்புளிய மரம் இன்னும் ஆழ்வார் திருநகரியில் அப்படியே யுள்ளது. ஐந்து தலை பாம்பைப் போல் 5 கிளைகளாகப்

பிரிந்துள்ளது. இதில் புளியங்காய் காய்ப்பதில்லை. இதை "திருப்புளி ஆழ்வார்" என அழைக்கின்றனர்.

**பக்திசாரன் :** என்ன மாமா இது, கதையைப் பாதியிலேயே விட்டு விட்டீர்களே!

**கீ. மாமா :** நான் கதையை எங்கும் விடவில்லை! நம்மாழ்வாரின் கதையில் இப்புளிய மரத்தைப் பற்றிக் கூறாமல், வேறு எதையப்பா கூறமுடியும்? சரி, பக்திசாரா அந்த 16 வயது பாலகன் யாரென்று சொல் பார்ப்போம்.

**கோவிந்தன் :** அந்த 16 வயது பாலகன் காரியின் குழந்தை மாறன்தானே மாமா?

**கீ. மாமா :** சரியாகச் சொன்னாய். மதுரகவிகள் அந்தப் பாலகன் மாறனைப் பார்த்தாரா! பார்த்து ஒரே வியப்புக்குள்ளானார். அவர் ஆடாமல் அசையாமல் இருப்பதைக் கண்டு அவருக்கு உணர்ச்சிகள் (சைதன்யம்) இருக்கிறதா என்று பார்க்க ஒரு கல்லை எடுத்துப் போட்டார். உடனே மாறன் கண்ணைத் திறந்து பார்த்தார். உடனே மதுரகவி, "செத்தத்தின் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத் தின்று எங்கே கிடக்கும்"? என்று கேட்டார். அதற்கு மாறன் "அத்தைத் தின்று அங்கே கிடக்கும்" என்று பதில் கூறினார்.

**ஆண்டாள் :** என்ன மாமா ஒன்றுமே புரியவில்லையே? சரியாக விளக்கிச் சொல்லுங்களேன்.

**கீ. மாமா :** மதுரகவிகளோ ஒரு சிறந்த அறிஞர். அவரே மாறனின் அறிவைக் கண்டு மயங்கி அவருக்கு சிஷ்யரானார் எனில், மாறனின் அறிவைக் கூறவே வேண்டாம். ஆகவே அவர்கள் பேசுவது நமக்குப் புரிவது கடினமே. அதற்கு விளக்கம் இதுதான்: மதுரகவிகள் கேட்டது, "இந்த உடலிலே ஆத்மா பிறந்தால் அது எதை அநுபவித்து எங்கு இருக்கும்?" அதற்கு மாறனின் பதில், "அந்த உடலின் சுக துக்கங்களை அநுபவித்துக் கொண்டு அந்த உடலியே இருக்கும்."

(தொடர்ச்சி 50ம் பக்கம்)

# தேவு மற்றறியேன் - 18

சீராரும் சித்திரையில், சித்திரையாம் நன்னாளில் அவதரித்த சீர்த்த மதுரகவி செய்கலையாம் கண்ணி நுண் சிறுத்தாம்பின் இன்சுவையே வடிவான பாசுரங்களை இதுவரை அநுபவித்தோம். மதுரகவியாழ்வாருடைய தனிப்பெருமை — இவர் ஆசார்யனே பரம்பொருள் என்று நிலைத்த சரமபர்வ நிஷ்டையில் ஊன்றியிருந்தமையே. ஆழ்வார்கள் பதின்மரும் எம்பெருமானைப் பேற்றுக்கு அடியாகப் பற்றி இருந்தனர். இவர்களது, ப்ரதமபர்வம் எனப்படும் முதல்நிலை. இவர்கள் பகவானை அநுபவிக்கப் பெற்றபோது, ''உண்டுகளித்தேற்கு

**Dr. V.V. ராமானுஜம்**

உம்பர் என் குறை?'' என்று இன்புற்றிருப்பர். அந்த அநுபவம் இல்லாதபோது, ''சாயலொடு மணிமாமை தளர்ந்தேன் நான்'' என்று தரைப்பட்டு வருந்தி வார்த்தை சொல்வர். மதுரகவிகளோ, தமதாசார்யரான நம்மாழ்வாரை பரம ப்ராப்யமாக (உயர்ந்த பேறாக) மதித்து வாழ்ந்தார். இவர் நிலையே கடைநிலையான சரமபர்வநிஷ்டை.

கண்ணிநுண் சிறுத்தாம்பு எனப்படும் இப்பிரபந்தம் திருமந்திரத்தின் நடுப்பதமான நம: என்பதன் நிலையிலுள்ளதை ''வாய்த்த திருமந்திரத்தின் மத்திமாம் பதம்போல் சீர்த்த மதுரகவி செய்கலை'' என்று மணவாள மாமுனிகள் நமக்குக் காட்டித் தந்துள்ளார். பகவானுக்கு அடிமைப்பட்டிருப்பதன் எல்லை அவனடியார்களான பாகவதர்களுக்கு

அடியனுபிருக்கை. இந்த நிலையை நமா பதம் வலியுறுத்தும் "நம்பிக்கு ஆளுரியனுய் மேவினேன் அவன் பொன்னடி" என்கையால், குருகூர்நம்பியான ஆழ்வார் விஷயத்தில் இவருக்குண்டான சேஷத்வ பாரதந்தர்யங்களை இப்பிரபந்தம் சொல்லுவதாயிருக்கும். இந்தப் பிரபந்தமே நமக்கு ஏனைய ஆழ்வார்களருளிச் செய்த எல்லாப்பிரபந்தங்களையும் காட்டித் தரக் காரணமாயிருந்ததை முன்னரே கண்டோம்.

இந்தப் பாசுரங்களில் பேசப்பட்டது நம்மாழ்வாருடைய பெருமை அதாவது ஆசார்ய வைபவம். "சடகோபன் என் நம்பி" என்னும்படி, ஞானம், பக்தி, வைராக்யம் இவைகளினுல் பூர்ணர் (நிறைந்தவர்). "மிக்க வேதியர்—நிற்கப் பாடியென் நெஞ்சுள் நிறுத்தினுன்" என்று ஆழ்வாரின் ஞான பூர்த்தியைப் பேசி, "கண்ணிநுண் சிறுத்தாம்பினுல்...பெருமாயன், என்னப்பன்" என்று ஆழ்வாருகந்த கண்ணன் சரித்திரத்தைச் சொல்லி அதனுல் ஆழ்வாரின் பக்திப் பெருக்கைக் காட்டி, மேலே, "புன்மையாகக் கருதுவர் ஆதலின்" என்று தம் புன்மையைப்பேசி, அப்புன்மையையிட்டே தம்மை ஆழ்வார் கைக்கொண்டமையால் பிரகாசிக்கும் ஆழ்வாரின் கரைகடந்த கிருபையையும் பேசினுர். இவர் காட்டும் ஆழ்வாரின் ஸ்வரூபங்களாவன—சேஷித்வம், சரண்யத்வம், ப்ராப்யத்வம். "அன்னையாய் அத்தனுய் என்னை ஆண்டிடும் தன்மையான்" என்று சேஷித்வத்தையும் (ஸ்வாமியாயிருக்கை), "தேவுமற்றறியேன்" என்று சரண்யத்வத்தையும் (புகலாயிருக்கை), "நாவினுல் நவிற்று இன்பமெய்தினேன்" என்று ப்ராப்யத்வத்தையும் (அடையத்தகுந்த தத்துவம்) வெளியிட்டார். எம்பெருமானைப் பற்றுவதான முதல் நிலையை விட்டு அவனடியாரைப் பற்றுவதான நடுநிலையையும் விட்டு, ஆசார்யனுன ஆழ்வாரையே எல்லாமாகப் பற்றும் கடைநிலையில் நிலைத்த மதுரகவியாழ்வாரின் பெருமை இப் பிரபந்தத்தில் நன்கு விளங்கும்.

"மதுரகவியாழ்வாருடைய இந்த நிலையே இவ்வுலகில் மாந்தர்க்கெல்லாம் உய்யும் உபாயமாக இருக்குமது" என்று அனைத்துலகும் வாழப்பிறந்த எதிராச மாமுனியாம் நம்மிராமானுசன் நமக்குக் காட்டித்தந்துள்ள பேருபகாரத்தை பேசும் அமுதனார்,

**எய்தற்கரிய மறைகளை ஆயிரமின் தமிழால்**
**செய்தற்குலகில் வரும் சடகோபனைச் சிந்தையுள்ளே**
**பெய்தற்கிசையும் பெரியவர் சீரையுயிர்களெல்லாம்**
**உய்தற்குதவுமிராமாநுசன் எம் உறுதுணையே.**

என்று இராமாநுச நூற்றந்தாதியில் பாசுரமிடுகிறார். இங்கு மதுரகவிகளை, பெரியவர் என்றழைப்பது காண்க. ராமாநுசனின் அன்பைக் கவர்ந்த வேறுயாரையும் பெரியவர் என்னவில்லை அமுதனார். ஆக, நிகரற்ற பெருமை படைத்த பெரியவர் மதுரகவிகளே.

**புவியுமிரு விசும்பும் நின்னகத்த நீயென்**
**செவியின் வழிபுகுந்து என்னுள்ளாய்—அவிவின்றி**
**யான் பெரியன் நீ பெரியை என்பதனை யாரறிவார்?**
**ஊன்பருகு நேமியாய்! உள்ளு**

என்ற நம்மாழ்வார் (பெரிய திருவந்தாதி) பாசுரப்படியே, மிகவும் பெரிதான பரப்பிரம்மத்தையும் தம்முள்ளடக்கிய பெரியனான ஆழ்வாரை தன்னிதயத்துள் அடக்கிய 'பெரியவர் மதுரகவிகள். உண்டபோது ஒருபேச்சும் உண்ணாதபோது ஒரு பேச்சும் பேசும் ஆழ்வார்கள் பதின்மரையும் கண்டு சிரித்திருக்குமவரிறே இவர். இவ்வாழ்வாருடைய வாழி திருநாமத்தில் சில வாக்கியங்கள் வருமாறு:

**பராங்குசனே பரனென்று பற்றினன் வாழியே**
**மத்திமமாம் பதப்பொருளை வாழ்வித்தான் வாழியே**
**உத்தரகங்காதீரத்து உயர்தவத்தோன் வாழியே**

பகவானைப் பற்றிய ஏனைய ஆழ்வார்களது நிலை தவ மாகும். ஆசார்யனையே தேவுமற்றறியேன் என்று எல்லா மாகப் பற்றிய இவர் நிலை, உயர்தவ மாகும். அதனால் இவர் உயர்தவத்தோன் என்று கொண்டாடப்படுகிறார்.

இப்படி உயர்தவத்தரான மதுரகவிகளின் தெய்வமான ஆழ்வாரின் திருவடிகளை பரமப்ராப்யமாகப் பற்றி உயர்ந்த வர், மாறனடி பணிதுய்ந்தவர் என்று கொண்டாடப்படும் நம் ஸ்வாமி எம்பெருமானார். ஒரு காலத்தில் மதுரகவிகள் என்று அழைக்கப்பட்டிருந்த ஆழ்வார் ஸ்ரீபாதுகைகளுக்கு மாறனடி பணிந்துய்ந்த எதிராசர் ஆழ்வார் திருவடி தொழுத பின்னர், "பூமகள்கோன் பொன்னரங்கர் பூங்கழற்குப் பாதுக மாய் தாம் திகழும் செல்வச் சடகோபர்—தேமலர்த்தாட்கு ஏய்ந்தினிய பாதுகமாம் எந்தை இராமாநுசன்" என்கிற படியே, ராமாநுசன் என்று அழைக்கப்படுபவையாயின.

ஆசாரியன் என்ற சொல்லுக்கு நேரான பொருள் நம்பிராமாநுசனே. "மாதவனே கண்ணுறநிற்கிலும் காணகில்லா உலகோர்களெல்லாம் அண்ணல் இராமாநுசன் வந்து தோன்றிய அப்பொழுதே நண்ணருஞானம் தலைக்கொண்டு நாரணற்காயினரே" என்று அமுதனார் திருவாக்கு. இவர் பிறப்பால் "கலியும் கெடும் கண்டு கொண்மின்" என்று நம்மாழ்வார் திருவாய்மொழியில் முன்கூட்டியே உலகுக்கறி வித்து, மதுரகவிகளுக்கும் நாதமுனிகளுககும் இவ்வாசகத்தில பொருளாக அர்ச்சாரூபத்தில் (பவிஷ்யதாசார்யராக) இராமா நுசனுருவத்தைக் காட்டித்தந்த பெருமை இவரொருவருக்கே உண்டு. இவர் இவ்வுலகத்தில் அவதரிப்பதற்குப் பல நூற் றாண்டுகளுக்கு முன்னரே இவருக்கு அர்ச்சா விக்ரஹம் ஏற்பட்டது இவர் பெருமைக்குத் தனிச்சான்று. திருவரங்கன் தன் ஸாம்ராஜ்யமான நித்ய விபூதி லீலாவிபூதி யாவற்றையும் இவரிட்ட வழக்காகத் தந்ததால் இவர் உடையவர் ஆனார் "உமக்கும் உம்முடையோர்க்கும் மேல்விடு தந்தோம். நித்

திருவரங்கத்தே இனிதே இரும்'' என்று அரங்கன் இவருக்கு ஒரு வரம் தந்துள்ளது ப்ரஸித்தம்.

நாம் நமது குலப்ராப்தமான ஆசார்யனைக்கிட்டி ஸமாச்ரயணம் பெறுவது ராமாநுஜஸம்பந்தம் பெறுவதற்காக. பெரும்பாலும் தாஸ்யநாம மிடுகையில் ராமாநுஜதாஸன் என்ற பெயரே இடப்படுவது காண்க. ராமாநுஜீயோஸி – ஸ்ரீராமாநுசனுடையான் என்று ஆசார்யன் அபிமானிப்பதும் காண்க. திருவாய்மொழி விண்ணப்பம் செய்வாரை, ''ராமாநுசனுடையார்'' என்று அருளப்பாடு இடுவது ஸம்ப்ரதாயம்.

ஆக, எம்பெருமானார் திருவடிகளே சரணம் என்ற மந்திரத்துக்கு மேற்பட்ட மந்திரம் எதுவுமில்லை என்ற துணிவு கொள்வோமாக என்று கூறி இக்கட்டுரைத் தொடரை முடிக்கிறேன்.


## ஸ்ரீ வைஷ்ணவா பத்ரி ஸ்பெஷல்

92, டி பி கோயில் தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை-600005 போன் : 841151

**30-6-80 முதல் 36 நாட்கள் 27 நாட்கள் ரயில் பிரயாணம்**

சம சீதோஷ்ணமான காலத்தில் ஸ்ரீவைஷ்ணவர்களைக் கொண்டு 2 வேளை ஆகாரம், காபி, ஊரைச் சுற்றிப் பார்க்க வண்டி செலவு பத்ரீ-தேவபிரயாகை ஸ்பெஷல் பஸ் மூலம் போக வர

**2ம் வகுப்பு 27 நாட்களுக்கு ரூ. 1350/-**
**முதல் வகுப்பு 27 நாட்களுக்கு ரூ 2700/-**
**2ம் வகுப்பு 36 நாட்களுக்கு ரூ. 1755/-**
**முதல் வகுப்பு 36 நாட்களுக்கு ரூ. 3006/-**

போகும் இடங்கள் :

**வால்டேர், பூரி, கயா, காசி, அயோத்தி, திரிவேணி, நைமிசாரண்யம், அரித்வாரம், தேவப்பிரயாகை, பத்ரிகாஸ்ரமம், குருக்ஷேத்திரம், டில்லி, மதுரா, கோகுலம், பிருந்தாவனம், புஷ்கரம் (27 நாட்கள் முடிவு)**
**ஆக்ரா, டாகூர்துவாரகை, அகமதாபாத், துவாரகை, பேட்துவாரகை, பம்பாய், சென்னை.**

ஆர்கனைசர் **ஆளவந்தார்**

# நுமது என்னும் சொல்

## R. வேங்கடராமாநுஜதாசன்

"அமுதத்திருவாய் ஈரத்தமிழ்" என்னும் திருவாய்மொழியில் உள்ள உபதேசப் பத்துக்களில் முதற்கண் உள்ளது "வீடு மின் முற்றவும்" என்று தொடங்கும் திருவாய்மொழி. இதில் மக்களை நோக்கி, 'புறம்புள்ள பற்றுக்கள் யாவற்றையும் அறவே விட்டு இறைவனை நீங்கள் பற்றுங்கள்; துன்பம் நீங்கி இன்பம் பெறலாம். என்று ஆழ்வார் உபதேசம் செய்கிறார். இதனை "வீடு செய்து மற்றெவையும் மிக்க புகழ் நாரணன்தாள். நாடு நலத்தால் அடைய நன்குரைக்கும், நீடு புகழ். வண்குருகூர் மாறன் இந்த மாநிலத்தோர் தாம்வாழ, பண்புடனே பாடியருள்பத்து" என்ற திருவாய்மொழி நூற்றந்தாதிப் பாசுரத்தால் நன்கு அறியலாம். மிக்க புகழையுடைய குருகைப்பிரான், இவ்வுலக மக்கள் வாழ்வதற்காகப் பாடியருளிய இப்பத்தானது, பிற பற்றுக்கள் எல்லாவற்றையும் விட்டு, எண்ணற்ற கல்யாண குணங்களையுடைய ஸ்ரீமந் நாராயணனை, நாட்டார் பத்தியினால் அடையும்படி உபதேசிக்கின்றது, என்பது இதன் பொருள்.

இப்பெற்றித்தாய இதில் "நீர் நுமதென்றிவை வேர்முதல் மாய்த்து இறை சேர்மின் உயிர்க்கு அதன் நேர் நிறை இல்லே" என்று ஒரு பாசுரம். "நீவிர், நுமது என்ற இவற்றை 'அறவே விட்டு, இறைவனைப் பற்றுமின்; உயிர்கட்கு அதனோடு ஒத்த நிறைவு வேறு இல்லை, என்பது பொருள். நீர் என்றசொல, முன்னிலைப் பன்மைப் பெயர்; சேர்மின் என்ற வினைகொண்டு முடியும். "நுமது என்ற இவை" என்பதற்கு உங்களுடையது என்கிற இவற்றை என்று பொருள். அதாவது ஆத்மாவையும் ஆத்மாவைச் சார்ந்த பொருள்களையும் உங்களு

டையதாக எண்ணுகையாகிற இவற்றை என்பதாம். ஆத்மா எம்பெருமானுடைய பொருள்; அதனை உங்களுடையதாகக் கருதுவது அறியாமையின் காரியம்; ஆத்மா அவனுடைய பொருளாகின்ற வளவில் ஆத்மாவைச் சார்ந்தவையும் அவனுடைய பொருளாகின்றன; ஆதலால், நீங்கள் உங்களுடையதாக எண்ணுகிற எண்ணங்களை "வேர் முதல் மாய்த்து—அறவே ஒழித்து என்று அருளுகிறார் ஆழ்வார்."

யான் என்கிற அகப்பற்றும்—அகங்காரமும், எனது என்கிற புறப்பற்றும்—மமகாரமும் ஆகிய இவை உள்ளவாறு உணராமையால் வருவனவாம்; பிறவித் துன்பத்திற்கு இவையே காரணமாம்; அவித்யா தருஸம்பூதி பீஜம் ஏதத்—இருவினை என்கிற மரம் உண்டாவதற்கு விதை இது; த்விதாஸ்திதம்—இரண்டாக இருக்கின்றது, ஒருமரத்திற்கு இரண்டு விதைகள் அமைந்துள்ளன என்று பொருள். இவ்வாறு சாஸ்த்ரம் கூறுகின்றது. அறியாமை நீங்கி இவை அறும்பொழுது பிறப்பு அறும்; அங்ஙனம் பிறப்பினை அறுத்துக்கொண்ட ஒருவன் வானோர்க்கும் எய்தல் இயலாத உயர்ந்த வீட்டுலகத்தை எய்தும் என்று திருவள்ளுவரும் கூறியுள்ளார். "யான் எனதென்னும் செருக்கறுப்பான், வானோர்க்கு உயர்ந்த வுலகம் புகும்" என்று. வானோர்க்கும் எய்தலாகாத வுலகம் என்று பொருள். உயர்வுச் சிறப்பு உம்மை தொக்கி நிற்கின்றது.

இந்த அகப்பற்றும் புறப்பற்றும் ஆகியவை அறவே ஒழிய வேண்டும் என்பதை "கொண்டபெண்டிர்" என்கிற திருவாய்மொழியில் ஆழ்வார் நன்கு விளக்கமாகக் கூறியுள்ளார். கண்ணன் தவிர வேறு ரக்ஷகப் பொருள் இல்லை என்பதை நிலைப்பெறுத்துவதற்குப்; பூமியின் பாரம் நீங்குவதற்கும் வடமதுரையில் தோன்றினான், நும் உடைமை யென்பது யாதுமில்லை; உங்கள் கருத்தால் உண்டு என்று நினைப்பின் அது தவறு; திடமாக அவன் திருவடிகளில் அவனுடைமையாக

அவற்றைச் சேர்த்து விடுங்கள்; எல்லாம் அவனுடைய உடைமைப்பொருளாக இல்லாமல் இல்லை என்று அருளி யுள்ளார். "திண்ணமா நும்முடைமையுண்டேல் அவனடி சேர்த்துய்ம்மினோ எண்ணவேண்டா நும்மது ஆதும் அவனன்றி மற்றில்லையே" என்பது பாசுரப் பகுதி. இங்கு "உங்களோடு உங்கள் உடைமையோடு வாசிஅற அவனுக்கே சேஷம்—அவனுக்கே உடைமை" என்ற வியாக்யானத்தைக் கவனித்தல் வேண்டும். ஆதலால் ஒருவன் தன்னைத் தன்னுடைமையாக (அதாவது தன்னைத் தன் வயத்தனாக) எண்ணுதலும், தன்னைச்சார்ந்த பொருள்களைத் தன்னு டையனவாக எண்ணுதலும் அறியாமையால் வருவது என்றும், தன்னை எம்பெருமானுடைய பொருளாகவும், தன்னைச் சார்ந்தவற்றையும் எம்பெருமானுடைய பொருள் களாகவும் எண்ணுதல் உண்மை அறிவால் வருவது என்றும் அறிதல் பாலதாம். "உடைமை நான் என்றும் உடையான் உயிரை வடமதுரை வந்து உதித்தான் என்றும்—திடமாக அறிந்து அவன்றன் தாளில் அடைந்தவர்க்கும் உண்டோ' பிறந்து படும் நீள்துயரம்பின்'; என்ற ஞானசாரப் பாசுரம் இங்கு அறியத்தக்கதொன்று. "யானே என்னை அறிய கிலாதே, யானே என்தனதே என்றிருந்தேன் யானே நீ என்னுடைமையும் நீயே, வானேயேத்தும் எம் வானவர் ஏறே" என்ற பாசுரத்தில் யான் என்றும் என்னு டையது என்றும் என்னை அறியாமல் இருந்தேன்; இப்பொழுது உன்னருள் பெற்றபின் என்னை அறிந்து, யானும் என்னைச் சார்ந்த பொருளும் உன்னுடைய உடைமை என்று அறிந்து கொண்டேன் என்று அருளிச் செய்திருப்பதால், யான் என்று தன்னைச் சுவதந்திரப் பொருளாகவும், தன்னைச் சார்ந்த வற்றைத் தன்னுடைமைப் பொருளாகவும் எண்ணுதல் அறியாமையால் வருவது என்பது தெளிவு. ஆகையால், நுமது என்னும் சொல் அகங்கார மமகாரங்கள் இரண்டையும் குறிக்கும் சொல்லென உணர்க.

# வைகுண்டப் பெருமாள்

**கண்ணன் :** பார்த்தா! இப்போது நாம் பரமேச்சுர விண்ணகரம் எனும் வைகுண்டப் பெருமாள் ஆலயத்திற்குச் செல்வோம் வா!

**பார்த்தன் :** இந்த ஸன்னிதி எங்குள்ளது?

**கண்ணன் :** இந்த பரமேச்சுர விண்ணகரம் எனும் திவ்ய தேசம் காஞ்சிபுரம் பஸ் ஸ்டாண்டிற்கும் ரயில்வே ஸ்டேஷனுக்கும் இடையில் வடகிழக்காக அமைந்துள்ளது. பஸ் ஸ்டாண்டின் பின்புறம் வழியாகவோ, அல்லது காஞ்சி கவர்மெண்ட் ஆஸ்பத்திரிக்குப் பின்புறவழியாகவோ நடந்தே

T. A. பரஷ்யம்

சென்று இந்த வைகுண்டப் பெருமாள் ஆலயத்தினை அடையலாம். கிழண்டை ராஜ வீதியில் இயல் சாற்று மண்டபத்திற்கு எதிரில் அமைந்துள்ளது இந்தக் கோயில். இதுதான் ஸன்னிதி. இந்த ஸன்னிதியைப் பற்றி அனேக விஷயங்களை கூற வேண்டும்.

**பார்த்தன் :** நன்று கண்ணா! இந்த ஸன்னிதியைப் பார்க்கும் போதே மிகவும் நேர்த்தியாகவும் அழகாகவும் காட்சி தருகின்றதே. கோயில் நல்ல பராமரிப்புடன் இருக்கும் போல் உள்ளதே!

**கண்ணன் :** ஆம். இந்த ஸன்னிதி மத்திய அரசாங்கத்தின் தொல் பொருள் இலாகாவினரால் பராமரிக்கப்பட்டு வருகின்றது. ஏனெனில் இந்த ஸன்னிதி முழுவதும் பல்லவப் பேரரசர்களின் கைத்திறனால் பல கலைச் சிறப்பினைத் தன்னகத்தே கொண்டு மிக மிக அமைதியாகவும் தனித்தும் விளங்குகின்றது.

**பார்த்தன் :** அப்படியா? ஸன்னிதிக்கு கோபுரம் இல்லை போல் தெரிகின்றதே!

**கண்ணன் :** ஆம். ஆயினும் பல்லவப் பேரரசர்களின் சிற்பத் திறமை அனைத்தையும் கொண்ட கற்றளிகளால் சிறப்பாக எழுப்பப் பெற்று கம்பீரமான தோற்றத்தோடு விளங்கும் விமானம் இந்த ஸன்னிதிக்கே உள்ள தனிச் சிறப்பு. இது தான் முன் மண்டபம். இங்கே பெரிய திருவடி ஸன்னிதி உள்ளது. இந்த முன்புற மண்டபம், பலிபீடம், துவஜஸ்தம்பம் ஆகியவை சோழர்காலப் பாணியில் அமைக்கப்பட்டுள்ளன. உள்ளே உள்ள இரண்டாவது மண்டபத்தில் இந்த ஸன்னிதியின் தனிக்கோயில் நாச்சியாரான வைகுந்தவல்லித் தாயார் ஸன்னிதி உள்ளது. இனி நாம் இந்த தாயாரை ஸேவித்துவிட்டு ப்ரதான ஸன்னிதிக்குச் செல்வோம்.

**பார்த்தன் :** ப்ரதான ஸன்னிதி ப்ரதக்ஷிணம் பூராவும் ஒரே சிற்பக் களஞ்சியக் கூடங்களாகத் திகழும் போல் உள்ளதே.

**கண்ணன் :** ஆம். இப்போது முதலில் நாம் உள் ப்ரகார ப்ரதக்ஷிணமாக வந்து பெருமான் ஸன்னிதியை ஸேவிப்போம். பிரதக்ஷிணம் பூராவும் பல்லவமன்னன் நந்திவர்மனால் நிர் மாணிக்கப்பட்டுள்ள, சுதையினால் ஆன எழில்மிகு சிற்பங் களைப் பார்.

இக்கோயிலில் மூன்று தளங்கள் உள்ளன. கீழ்தளத்தில் பெருமான் இருந்த திருக்கோலத்திலும் நடுத்தளத்தில் கிடந்த திருக்கோலத்திலும் மேல்தளத்தில் நின்ற திருக்கோலத்திலும் ஸேவை தருகிறான்.

**பார்த்தன் :** அது சரி! இச்சிற்பங்கள் உடைந்து பாழடைந்து இருப்பதால் இவை எவற்றைக் குறிக்கின்றன என்றே புரியவில்லையே!

**கண்ணன் :** இச் சிற்பத்தொடர் பல்லவ அரசர்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைக் குறிக்கின்றன. அவர்களது எழுச்சி, பட்டாபிஷேகம், போர் போன்ற அரசியல் நிகழ்ச்சிகளையும் சமயம், வாழ்க்கைநிலை போன்ற சமூகச் செய்திகளையும் புரிந்து கொள்வதற்கு இச்சிற்பங்கள் பெரிதும் உதவுகின்றன என்று தொல்பொருள் ஆய்வுத் துறையினர் கூறுகின்றனர். தவிர எம்பெருமானது பல வடிவங்களையும் திருவவதாரங்களையும் அழகிய முறையில் வடித்துள்ளனர். இப்போது ப்ரதான ஸன்னிதிக்குப் பின்புறம் வந்திருக்கிறோம்.

**பார்த்தன் :** இது என்ன கண்ணா! இங்கு ஒரு கதவு இருக்கிறதே! இங்கும் ஏதாவது ஸன்னதி இருக்கிறதா?



**கண்ணன் :** இது ஸன்னதியல்ல! இரண்டாவது தளத்திலுள்ள ஸன்னதிக்குப் போகும் வழி. இங்குள்ள படிக்கட்டுகளின் வழியாக நடுத்தளத்திற்குச் சென்றால் கிடந்த திருக்கோலத்து எம்பெருமானை ஸேவிக்கலாம். அதோ பார். ஆதிசேஷன் மீது வடக்கே திருமுடியும், தெற்கே திருவடிகளுமாய் மேற்கு நோக்கி, ஸ்ரீதேவி பூதேவிகளோடு ஸேவை தருகின்றான். திருமங்கை ஆழ்வார். இவரை "[illegible]ரு **மெல்லணைப் பள்ளி கொண்டான்**" என்று மங்களாசாஸனம் செய்துள்ளார். இனி நாம் கீழே இறங்கிச் செல்வோம் வா!

**பார்த்தன் :** மேல்தளத்தில் பெருமாள் நின்ற திருக்கோலத்தில் எழுந்தருளியுள்ளதாகச் சொன்னாயே! அவரை நாம் ஸேவிக்கவில்லையே! அவர் எப்படியிருப்பார்?



**கண்ணன் :** தற்போது அந்த தளத்திற்குச் செல்வதற்கு அரசினர் அனுமதிப்பதில்லை. அங்கு எழுந்தருளியிருந்த உத்ஸவரைத் திருமே ப்ரதான ஸன்னதியில் நாம் ஸேவிக்கலாம். நமது குறையைத் தீர்ப்பதற்கே போல் பிரதக்ஷிணத்தின் தென் மேற்கு மூலையில் ஒரு சிற்பம் உள்ளது. அச்சிற்பம் இக் கோயிலின் நின்ற திருக்கோலத்து எம்பெருமானது நிலையினை அப்படியே சித்தரிக்கிறது. அந்த சிற்பத்தையும் பார். இனி நாம் ப்ரதான ஸன்னிதிக்குள் நுழைவோம்.

**பார்த்தன் :** கண்ணா! பெருமாள் வீற்றிருந்த திருக்கோலத்தில் எழுந்தருளியிருந்தாலும் முன்னால் உத்ஸவரும மற்ற எம்பெருமான்களும் மறைத்துக் கொண்டிருப்பதால் எப்படி எழுந்தருளி இருக்கிறார் என்று தெரியவில்லையே!

**கண்ணன் :** பரவாயில்லை, இப்போது இப்பெருமானை நன்கு ஸேவி. பிறகு இங்கு எழுந்தருளியிருக்கும் மூலவரைப் போன்ற சிற்பம் ஒன்றையும் ஸேவித்தால் புரிந்துவிடும். வலது

திருக்கரத்தினை அபய ஹஸ்தமாகவும், இடது கரத்தினை வரத ஹஸ்தமாகவும், வலது திருவடியினை மடக்கியும் இடது திருவடியினை நீட்டியும் வைகுந்தநாதன் என்ற பெயருக்கேற்ப—பரமபதநாதனாக ஸேவை தருகின்றான்.



**பார்த்தன் :** நன்றாக ஸேவித்தேன். இதுவரை நாம் ஸேவித்த திவ்ய தேசங்களில் எல்லாம் பெருமாளை ஸேவித்த பிறகு வேறு நினைவே எழாது. ஆனால் இந்த திவ்ய தேசத்தில் மட்டும் எம்பெருமானை ஸேவிக்குப்போது, இவ்வெம்பெருமானுக்குப் பற்பல கைங்கர்யங்களைச் செய்துள்ள பல்லவர்களையும் சேர்த்து வாழ்த்தத் தோன்றுகிறது அல்லவா?

**கண்ணன் :** நன்று சொன்னாய் பார்த்தா! திருமங்கையாழ்வார் இவ்வெம்பெருமானை பத்து பாசுரங்களால மங்களாசாஸனம் செய்துள்ளார். அப்பத்து பாசுரங்களிலும் முதல் இரண்டடிகளால் எம்பெருமானையும் பின் இரண்டடிகளால்

இத்திருப்பணிகளைச் செய்துள்ள பல்லவமல்லன் என்ற நந்தி வர்ம பல்லவனையும் பாடியுள்ளார். இதுவே அப்பல்லவர்கள் பெற்றுள்ள பெரும்பேற்றிற்குச் சான்றல்லவா?

**பார்த்தன் :** அது சரி! இக்கோயிலுக்கு, பரமேச்சர விண்ணகரம் என்று பெயர் வரக்காரணம்?

**கண்ணன் :** இதுகூடவா புரியவில்லை? பரமேச்சுரன் (பரமபதநாதன்) எழுந்தருளியிருக்குமிடமாதல்பற்றி அவ்வாறு வழங்கப்படுகிறது.

**பார்த்தன் :** இங்கே பல கல்வெட்டுக்கள் இருக்கும் போல் உள்ளதே.

**கண்ணன் :** இவ்வாலயத்தில் பல கல்வெட்டுக்கள் உள்ளன. நந்திவர்ம பல்லவ மாமன்னன் இவ்வாலயத்தை நிர்மாணித்தவற்றை அவைகள் செப்புகின்றன. வைகுந்த நாதனான இந்த எம்பெருமானுக்கு ஒரு பல்லவ மன்னன் வெள்ளிப் பேழை ஒன்றினை சமர்ப்பித்ததை மற்றொரு கல்வெட்டின் மூலம் அறிகிறோம். இனி நாம் இப்படியே வெளிப் ப்ராகாரமான 2 வது திருச் சுற்றினை வலம் வருவோம் வா. இந்த விமானத்தில் பல்லவர்கள் தமது சிற்பக் கலையின் சிரிய பல முத்திரைகளையும் பல எம்பெருமான்களின் வடிவங்களையும் வடித்துள்ளனர். நன்கு உற்றுப் பார்த்தயா?


**பார்த்தன் :** சரி கண்ணா! இங்கே நாம் வந்து சுமார் ஒரு மணி காலத்திற்கும் மேலாகிறது. இதுவரை நம் இரண்டு பேர்களைத் தவிர வேறு யாரையுமே காணவில்லையே. ஸேவார்த்திகள் வருவதே கிடையாதா?

**கண்ணன் :** என் சொல்வது பார்த்தா நமது திவ்ய தேசங்களை ஆஸ்திகர்கள் யாத்ரீகர்கள் பெரும்பாலும் ஸேவிக்க வருவதில்லை என்பதனை சற்றுவருத்தத் தோடு ஒத்துக் கொண்டே ஆக வேண்டும். மேலும் நமதுநண்பர் திருவாளர் திபம். நா. பா. அவர்கள் தீதாசார்யனில் இரு முறை எழுதி யுள்ளது போல் நமது அரசாங்கங்களின் சுற்றுலாத் துறையும் தனது சுற்றுலாப் பயணத் திட்டத்தில் காஞ்சி மாநகரினை சேர்த்திருந்தாலும் அந்தக் காஞ்சியில் பல்லவர்களின் கை வண்ணத்தோடு காண வேண்டிய முக்கியமான இந்த திவ்ய தேசத்தினை புறக்கணித்துள்ளனர். ஆனல் இப்போது தான் இந்த திவ்ய தேசங்களைப் பற்றியும் எம்பெருமான்களைப் பற்றியும் அனைவருக்கும் தெரியப்படுத்தி எல்லோரும் இந்த திவ்ய தேச யாத்திரையினையும் திவ்ய தேச எம்பெருமான்களை மங்களா சாஸனம் செய்யவும் ஊக்கப்படுத்துவதற்கு என்றே நமது தீதாசார்யன் இந்தப் பெரும் பணியில் ஈடுபட்டுள்ளதே. ஆகையினுல் இனி இந்த குறை விரைவில் நீங்கும் என்றே எண்ணுவோம். இதனைப் படிக்கும் வாசகர்கள் தாமும் தமது சுற்றத்தார் நண்பர்களோடு இந்த மாதிரி திவ்ய தேசங்களை அடிக்கடி சென்று ஸேவிப்பார்களே ஆனல் அதுவே நமது தீதாசார்யனின் பெரு வெற்றியாகும்.


**பார்த்தன் :** இங்கே நடைபெறும் உத்ஸவங்கள் என்ன?

**கண்ணன் :** இங்கே **சித்திரை புனர்வஸு** ப்ரம்மோத்ஸவமும், வைகுண்ட ஏகாதசியன்று உத்ஸவமும் கைசிக த்வாதசியும் நடைபெறுகின்றன. இந்த ஸன்னதியில் வைகானஸ ஆகமப்படி திருவாராதனம் நடைபெறுகின்றது. வெளியே உள்ள இந்த இடம் தான் ஒரு காலத்தில் புஷ்கரிணியாக இருந்திருக்க வேண்டும். புராணத்தின்படி இந்த தீர்த்தம் ஆயிரம் தீர்த்தம் எனக் காணக்கிடைக்கின்றது. *

# கீதாசார்யன்-20



7, தெற்குமாட வீதி,
திருவல்லிக்கேணி
சென்னை—600 005.



ஆசிரியர்

M. A. வேங்கடகிருஷ்ணன், M. A.

தொகுதி 2 | ரௌத்ரி ஸ்ரீ | வைகாசி மீ | மே. 80 | பகுதி 8

## ஆலோசகர் குழு

சாண்டில்யன் (தலைவர்)
Dr. V. V ராமாநுஜம்
K. R. ஸ்ரீநிவாஸாசாரியர்
S. வேங்கடகிருஷ்ண பட்டாச்சாரியர்
K. E. B. ரங்கராஜன்

## ஆஸ்திகரே!

சித்திரை வருஷப் பிறப்பு அன்று, ஆசிரியரும் நானும் கீதாசார்யன் அலுவலகத்தில், அலுவலகப் பணியில் ஈடுபட்டிருந்தோம். திடீரென்றுப் பிரவேசித்தார், திருவல்லிக்கேணியில் வசிக்கும் ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியை **திருமதி ஆண்டாளம்மாள்**. கீதாசார்யன் முன்னேற்றம் குறித்து எங்களைக் கேள்வி மேல் கேள்வி கேட்டுத் திண்டாட வைத்தார்.

எதற்காக இவ்வாறு கேள்வி கேட்கிறார் என்பது எங்களுக்குப் புரிவதற்குள், ஓர் அருமையான திட்டத்தை விவரித்தார்.

★


*BOARD OF DIRECTORS*

P. T. SUNDARA VARADAN
Director (Finance)

N. GANAPATHY
Director (Circulation)

R. RAVICHANDRAN
Director (Public Relations)

P. T. SRINIVASAN
Director (Administration)


★

**சந்தா விவரம்**

| | | |
|---|---|---|
| ஆயுள் சந்தா | ரூ | 100 |
| வருடச் சந்தா | ரூ. | 10 |

விலை ரூ. 1—00

"கீதாசார்யன் பணி வேகமாகவும், ஒரே மாதிரியும் எந்நாளும் வளர வேண்டும்; அதற்கு நிதி நிலைமை சீராக இருந்தாக வேண்டும்; அதுமட்டுமல்லாமல், நாளைய நிலை என்னவோ என்றில்லாமல கீதாசார்யனுக்கு ஒரு நிரந்தர மான நிதித் திட்டமும் அமைய வேண்டும்; அதற்காக 100 ஆஸ்திகப் பெருமக்களிடமிருந்து ஒவ்வொருவரிடமும் ரூ 1000 (ரூபாய் ஆயிரம்) பெற்று, அவர்களை கீதா சார்யனின் நிரந்தர போஷகராக (PATRON MEMBER) ஆக்கவேண்டும் இம்மாதிரி கிடைக்கும் நிதி மூலம் ஒரு 'TRUST' ஏற்படுத்தி, இப்பணி தொடர்ந்து நடக்க வேண்டும்."

இவையே மேற்கூறிய ஆஸ்திகரது திட்டம். இவ்வளவு பெரிய திட்டத்தை எவ்வாறு செயல்படுத்துவது? என்று நாங்கள் நினைத்து முடிக்குமுன் தன்னையே முதல் போஷகராக ஏற்றுக் கொள்ளும்படி கூறி **ஆயிரம் ரூபாயும்** வழங்கி எங்களை மகிழ்ச்சிக் கடலில் மிதக்க வைத்தார்.

குருக்ஷேத்திரத்திலே கலங்கி நின்ற போது, அர்ச்சுனனுக்கு 'ஸ்ரீமத் பகவத் கீதையை' உபதேசித்ததோடு மட்டுமல்லாமல் தானே தேரோட்டிப் போரை நடத்தித் தந்தானே! அம் மாதிரியே சொல் வீரத்தோடு மட்டுமல்லாமல் செயல் வீரத் துடனும் விளங்குகிற ஸ்ரீமதி ஆண்டாளம்மாளுக்கு நீண்ட ஆயுளை வழங்க 'கீதாசார்யனை' பணிகிறோம்.

இம்மாதம் முதல் இத்திட்டம் அமுலாக்கப் படுகிறது. வாசகர்களின் பெருவாரியான பங்கேற்பை நாடி நிற்கிறோம்.

பி. டி. சுந்தரவரதன்
இயக்குநர் (நிதி)

# பெயர்களாயிரம்

பாரதப்போர் முடிந்து விட்டது. பாண்டவர் வென்றனர். கௌரவர் தோற்று மாண்டனர். பீஷ்மரும் வீழ்ந்தார். ஆனால் மரணமடையவில்லை. தனக்கு விருப்பமுள்ளபோது மரணத்தை வரவழைத்துக் கொள்ளக்கூடிய வரபலம், சக்தி அவருக்கு இருந்தது. தக்ஷிணாயனம் முடிந்து உத்தராயணம் பிறந்தபின் மேலுலகு செல்லக் காத்திருந்தார். போர்க்களத்திலேயே அர்ச்சுனன் அமைத்துத் தந்த அம்புப் படுக்கையில் சயனித்திருந்தார்.

போரில் வெற்றிபெற்ற யுதிஷ்டரன் நாட்டை ஆளப் போகிறான். அவனுக்கு ராஜநீதி, தரும சாத்திரம் இவைகளை நன்றாக ஒருவர் உபதேசிக்க வேண்டும் என்று கிருஷ்ண பரமாத்மா கருதினார். "யுதிஷ்டிரரே! பீஷ்மர் இன்னும் சில நாட்களே இருக்கப் போகிறார். அவரைத் தவிர தர்ம சாத்திரங்களை உபதேசிக்கத் தகுதியானவர் இவ்வுலகில் யாருமில்லை. உடனே அவரிடம்போய் உமக்குள்ள சந்தேகங்களைக் கேட்டுத் தெளிந்து கொள்ளும்" என்றும் கூறினார்.

தருமபுத்திரரும் தமக்குள்ள சந்தேகங்களையெல்லாம் தீர்த்துக் கொண்டார். முடிவாக "சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டதும் உமது மனதில் ஒப்புயர்வற்றதாகவும் நீர் கருதும் தர்மம் யாது?" என்று கேட்டார். உடனே பீஷ்மர் சொன்னார்: "ஆயிரம் பெயர்களையுடைய ஸ்ரீமந் நாராயணனான இந்த தேவகிபுத்திரனே அத்தகைய தர்மம்—தர்மத்தின் உருவான கடவுள். அந்த ஆயிரம் திருநாமங்களையும் கூறுகிறேன் கேள்" என்று கூற ஆரம்பித்தார். ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமம் பிறந்தது.

# ஓம் விச்வஸ்மை நம:

## எல்லாவற்றிலும் பிரவேசித்து எங்கும் நிரம்பியிருப்பவர்

நம்மாழ்வார் பரம்பொருளை "கரந்து எங்கும் பரந்துளன்" என்கிறார். இத்திருநாமத்தின் பொருளும் அதுவே!

ஒரு நாத்திகன் "பகவான் இருக்குமிடத்தை எனக்குக் காட்டுவாயா?" என்று ஒரு ஆத்திகனைக் கேட்டானும், "ஆகா தாராளமாகக் காட்டுகிறேன் ஆனால் அதற்கு முன். நீ பகவான் இல்லாத இடத்தைக் காட்டுவாயா?" என்றானும் ஆத்திகன்.

---

## விசாகம்

---

பகவான் எல்லாவிடத்திலும் பரந்துள்ளான் என்றால், ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டும்—கோயிலில் மட்டும்— அவனைத் தொழ வேண்டிய அவசியம் என்ன? என்ற கேள்வி எழும். உலகில் காற்று இல்லாத இடமில்லை, ஆயினும் நமது புலன்களுக்கு அவை போராதபோது—எட்டாத போது விசிறி (fan) உபயோகிக்கிறோம் அல்லவா? அதுபோல ஊனக்கண் களுக்கு எம்பெருமானை நேரடியாக கிரகிக்கும் சக்தி இல்லை, எனவே கோயிலில் பகவானை வணங்குகிறோம். (இது ஓரள வுக்கே சரியான வாதமாகும்). மின்சாரம் ஒயர்கள் முழுவதும் பரவியிருந்தாலும் அது ஒரு பல்பில் மட்டுமே ஒளியாகிய பயனைத் தருவது போல உலகெங்கும் பரவியிருந்தாலும் ஒரு கோயிலில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் வழியாக அவ னுடைய அருள் நம்மீது பிரவகிக்கிறது.

ஸ்ரீ :

# திருமங்கை நாயகி

பேராசிரியர், K. A. மணவாளன், M.A.B.O.L.

புன்முறுவல் பூத்த முகம் பார்க்க அழகாக இருக்கிறது. பொன் நகையைவிடப் புன்னகை சிறந்ததல்லவா? ஆனால் புன்னகைக்கு வெண்மையான வரிசை மாறாத பற்கள் வேண்டும். முத்துப் போன்ற பற்களிருந்தாலும் முழுநிலாப் போன்ற முகமும் வேண்டும். கொவ்வைக் கனிவாயும் வில்லொத்து வளைந்த புருவமும் வேண்டும். கோல நீள்கொடி மூக்கும் குவளை மலர் போன்ற கண்களும் வேண்டும். இவ்வளவும் பெற்றிருந்தாள் அவள். வாவியும் சோலையும் சூழ்ந்த ஊரிலே பிறந்தவள். நன்கு கற்றவள். பருவம் வந்துற்றவள். தாயையும் தோழியையுமே உறவினராகக் கொண்டவள்.

அழகே வடிவான அவள் அன்னநடையிட்டு அன்னையோடு புறப்பட்டாள். அது கோடைக்காலம். பகலெல்லாம் வெம்மை வாட்டுகிறது. காற்று வாங்கக் கடற்கரைக்கு வந்தாள். எங்கும் வெண் மணற் பரப்பு. சில இடங்களில் இட்டுத் திட்டாய் மணற் குவியல்கள். ஆங்காங்குச் சிறிய பொய்கைகள். மாமரங்களும் முந்திரி மரங்களும் பூத்தும் காய்த்தும் குலுங்குகின்றன. காலால் உண்ட நீரைத் தலையால் தரும் தென்னை மரங்களும், நீண்டு வளர்ந்த சவுக்கு மரங்களும் போட்டியிட்டு வளர்ந்துள்ளன. விண் வீதியில் வரிசையாய்ப் பறக்கும் பறவையினங்கள். ஆரவாரமின்றி அமைதியாய்ச் செல்லும் கிராம மக்கள். உப்பங்கழிகளும் உடைந்த ஓடங்களும் எங்கும் காணப்படுகின்றன.

அங்கேதான் அவள் அவனைக் கண்டாள். பொன்போன்ற மேனியும் புரிகுழலும் பைங்கண்ணுமுடையனாய் அவன் காட்சி

யளித்தான். கண்கள் பேசின, தலை கவிழ்ந்தாள். காலால் நிலத்தில் வரியிட்டு நின்றாள். அவள் நெஞ்சு நிறையப் புகுந்தான் அவன். அவனும் அவளை மனத்துள் எழுதிக் கொண்டான். பிரிந்தனர். வீட்டுக்கு வந்தவள், தன்னை மறந்தாள். தாயையும் மறந்தாள். ஆனால் அவனை மறக்க வில்லை. மேலும் அவன் வரலாறுகளைத் தோழியர் மூலம் கேட்டறிந்தாள். அறிந்த பின்பும் ஆசைப்பட்டாள். அவன் திருமணமானவன்; பாற்கடலில் அமுதத்தோடு பிறந்த மஹாலக்ஷ்மியைக் கைப்பிடித்தவன். அவளும் அவனுடைய அழகிய மார்பில் ஒரு நொடியும் பிரியாமல் குடிகொண்டிருக்கிறாள். எவ்வளவு தெளிவாக அவனை உணர்ந்திருக்கிறாள் என்று அன்னை வியப்புற்றாள்.

இவள் தன் குலம் கோத்திரம் என்பதையெல்லாம் சிறிதும் எண்ணிப் பார்க்கவில்லையே! யாரோ சொல்லக் கேட்ட சரித்திரத்தால் ஒரு பெண்ணுக்காகத் தன் வீரத்தைக் காட்டி வெற்றிகொண்ட அத்தலைவன் தன் காதலுக்குக் கட்டுப்பட்டுத் தன்னையும் மீட்பன் என்று இடை நுடங்கும் படி மார்பகங்கள் விம்மப் பெருமூச்செறிந்து காத்து நிற்கின்றாளே? என்செய்வேன் என்று தாய் தவிக்கிறாள். அவனையே நினைந்து நினைந்து நெஞ்சுருகி நிற்கும் இவள் என்னை அடியோடு மறந்து விட்டாளே; ஒரு சமயம் திருமாலிருஞ்சோலை மலையானே என்கிறாள்; மற்றொரு சமயம் திருப்புட்குழிப் பெருமானே என்கிறாள்; மற்றொரு முறை திருநீர்மலை என்று வாய் வெருவுகிறாள். இப்படி அவனுடைய பல பெயர்களையும் வாழும் இடங்களையும் பலகால் சொல்லுகிறாள்.

அவன் குழலோசையில் தன்னை மறந்து—உடம்பெல்லாம் வெளுத்து—உறக்கமின்றிக் கண்கள்வாட—மின்னல் போன்ற இடை துவண்டு—நெருங்கிய மார்பகங்கள் கட்டுக் கடங்காமல் விம்ம-உடலால் உள்ளத்தால் வாடி வதங்கும் இவளுக்கு என்ன நோய்வந்துற்றதோ அறியேன் என்று தாய் அரற்றுகிறாள். இப்படியெல்லாம் அவனைக் கண்டது முதல் அவன் பெயர் களையே சொல்லி அவனையே அடையவிரும்பும் பெண்ணுக்

காகத் தாயின் மனம் ஏங்குகிறது. அவனிருக்கும் இடம் நாடி அத்தாய் செல்கிருள். அவனிடம் முறையிடுகிருள். பெருமானே! நீ திருமணமானவன் என்பதை அறிந்தும்—அதிலும் உன் மனைவி பாற்கடலில் அமுதத்தோடு பிறந்த மஹாலக்ஷ்மி என்பதைத் தெரிந்தும், அவள் ஒரு நொடியும் பிரியாமல் உன்னோடு உறைகின்ருள் என்பதை உணர்ந்தும் என்னுடைய பேதைப் பெண் உன்னையே நினைந்து உருகுகிருள்! ஆனல் இவளும் கோமளவல்லிதான்! குவளையங் கண்ணிதான்! அவள் பூரண சந்திரன் போன்ற திருமுகமுடையவளாயினும் இவளுடைய கண்ணழகு ஒன்றே போதும் நீ இவளை விரும்ப. மேலும் அவள் உன் மார்பை ஆசைப்பட்டு அங்கே குடி புகுந்தாள். இவளோ உன் திருவடிகளை ஆசைப்படுகிருள். இதன் பொருளும் ஏற்றமும் உனக்குப் புரியாதோ?

இப்படி உன் திருவடிகளையே விரும்பி, உன் திருநாமத்தையே சொல்லி, உன் திருஉருவையே நினைந்து உருகி நிற்கும் இவள் விஷயத்தில் பெருமானே உம்முடைய மனத்தால் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்? என்று தாய் கேட்டாள். அதற்கு அந்தத் தலைவன் கலங்காப் பெருநகரான பரமபதத்திலிருந்து இந்தப் பூலோகத்தில் வந்து கோயில்களிலே அர்ச்சாவதாரமாய்க் குடிகொண்டிருப்பதற்குக் காரணம் உன்னுடைய பெண்ணைப் போன்று என்னைச் சரணமாகப் பற்றும் பக்தர்களைக் காக்கவேயன்ரோ! என்று சொல்லி அத்தலைமகளை அணைத்துக் கொண்டான்.

இப்படித் தாயான நிலையில் பாசுரமிட்டவர் வேறுயாருமில்லை திருமங்கையாழ்வார் தான். இவ்வாழ்வார் தாய்ப் பாசுரமாகத் திருவிடவெந்தை எம்பெருமானை அனுபவித்த பெரிய திருமொழிப் பாசுரங்களின் சுருக்கமே சில கற்பனைகளோடு இணைத்து இங்கே காட்டப்பட்டது.

திவளும்வெண் மதிபோல் திருமுகத் தரிவை
    செழுங்கட லமுதினிற் பிறந்த
அவளும். நின்னுகத் திருப்பது மறிந்தும்
    ஆகிலு மாசைவி டாளால்
குவளையங் கண்ணி கொல்லி யம்பாவை
    சொல்லுநின் தாள்நயந் திருந்த
இவளை உன் மனத்தா லென்னினைந் திருந்தாய்
    இடவெந்தை யெந்தை பிரானே.

(பெரிய திருமொழி 2—7) (தொடரும்)

ஆசிரியர் பக்கம்

# இராவணன் கொன்ற இராமன்

**ஆசிரியர் :** என்ன ஆலவாயரே! சில பல மாதங்களாக உம்மைக்காணவே முடியவில்லையே என்ன காரணம்?

**ஆலவாயன் :** ஒன்றுமில்லை ஆசிரியரே! ஆழ்வார் பாசுரங்களின் அரும்பொருள்களைப் புரிந்து கொள்ள வேண்டுமானால் தமிழறிவு அதிகம் வேண்டுமல்லவா? அதற்காக சிறந்த தமிழ் வித்வான் ஒருவரிடம் தமிழ் பயிலப் போயிருந்தேன். ஆகா! தமிழ்தான் எவ்வளவு இனிமையான மொழி!

**ஆசிரியர் :** அதில் என்ன சந்தேகம் ஆலவாயரே? "எங்ஙனே சொல்லிலும் இன்பம் பயக்குமே" என்கிறார் நம்மாழ்வார். அவ்வாறு, எப்படிச் சொன்னாலும் சரியாக அமைவது தமிழ்மொழியாகத்தான் இருக்கும்! என்ன சொல்கிறீர்?

**ஆலவாயன் :** சில மாதங்கள் தமிழ் பயின்றுள்ளேன் என்பது உண்மைதான். ஆனால் தவறாகச் சொன்னால்கூட சரியாகப் போய்விடுமா என்ன?

**ஆசிரியர் :** தமிழில் முடியும் ஆலவாயரே!

**ஆலவாயன் :** உதாரணமாகச் சொன்னால்......

**ஆசிரியர் :** உதாரணமாக நான் **"இராவணன் இராமனைக் கொன்றான்"** என்று சொல்கிறேன். இந்த வாக்கியம் சரியா? தவறா?

**ஆலவாயன் :** எப்படி ஆசிரியரே சரியாகும். இராமாயணத்தின்படி இராமன் அல்லவோ இராவணனைக்

கொன்ருன்! நீர் இராவணன் இராமனைக் கொன்றதாகக் கூறுகிறீரே! இது எப்படிச் சரியாகும்?

**ஆசிரியர் :** அங்குதான் தமிழின் சிறப்பு இருக்கிறது அதைச் சற்று விளக்கமாகவே கூறிப் புரிய வைக்கிறேன்.

ராமபிரான் கறுத்தவண்ணமுடையவன் என்பது அனை வரும் அறிந்தது. அதாவது இருட்டு அல்லது இரவு போன்ற நிறமுடையவன். எனவே அவனை **இரா வண்ணன்** என்பது தவருகாது இராவண்ணன் என்பது இங்கு இராவணன் என்ருகியது (தமிழிலக்கணத்தில் இடைக்குறை என்று ஒன்று உண்டு. அதன்படி இப்படி ஆகும்). ஆக இங்கு இராவணன் என்றது இரவு போன்ற (கறுத்த) வண்ணமுடைய ராமனையே.

அரக்கர்களுக்கு நிசாசரர்கள்—அதாவது இரவில் திரிப வர்கள் என்று பெயருண்டு. அப்படி இராவில் திரிபவர்களுக்கு **மன்** (மன்னவ—அரசன்) அல்லவா இலங்கேசவரனுன இராவணன். எனவே இங்கே இராமன் என்றது இராவணனையே. எனவே இராவ(ண்)ணன் இராம(ன்ன)னைக் கொன்ருன் என்பது முற்றிலும் சரியே!

**ஆலவாயன் :** ஆகா! தமிழ்தான் எப்படி வளைந்து கொடுத்து மிளிருகிறது. இவ்வழகு தமிழில் தவிர வேறு எந்த மொழியிலும் கிடையாது என்பது திண்ணம்.

---

## ஓர் அறிவிப்பு

**ஆண்டுமலர் எல்லாப் பிரதிகளும் தீர்ந்து விட்டன. எனவே தயவு செய்து ஆண்டு மலருக் காக இனிமேல் பணம் அனுப்பவேண்டாம்.**

ஒரு மறுப்பு

# அழகு படுத்தும் பாடு

கு. சடகோபன், சங்கர்நகர்.

'ஸ்ரீதாசார்யன்' ஆண்டு மலரில் 'அழகு படுத்தும் பாடு' என்னும் கவின்மிகு கட்டுரையில் "தம்பியின் குழாத்தினர் சுற்றும்" என்ற கம்பன் பாடலுக்கு ஸ்ரீவசன பூடணத்தை (ஸ்ரீவசன பூஷணம்) ஒப்பு நோக்கி இருப்பதை மறுப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

அக்கட்டுரை ஆசிரியர் எழுதுவதாவது :

ஒருகால் இவ்விளையவனாகிய இலக்குவனால் இராம பிரானுக்கு என்ன தீங்கு நேருமோ என்று இளைய பெருமாளையும் சந்தேகிக்கிறான் குகன் "நடுக்கோத்துப் பிடித்த வில்லும் தாழுமாய் நடையாடும் மதின் போலே" வளைய வருகிற இளைய பெருமாளையும் சந்தேகிக்கக் காரணம் என்ன? ஊரில் ஒரு தம்பியாகிய பரதன் தாயைக் கொண்டு, கட்டின காப்போடே பெருமாளைக் காட்டிற்கு ஓட்டினான் இந்த இலக்குவனும் அவனைப் போன்ற வேறொரு தம்பியல்லவா? தனிமையில் என்ன தீங்கு செய்யக் கருதியோ இப்படி ஆயத்தனாய் நிற்கிறான் என்று சந்தேகித்து வில்லும் கோலுமாய்க் கொண்டு, இலக்குவன் இட்ட அடிகளிலே அவனுக்குத் தெரியாமல் அடியிட்டு நடந்து காத்தானாம் குகன். குகனைச் சூழ்ந்துள்ள வேடர்களோ இந்த இருவரையுமே சந்தேகிக்கின்றனர்; ஏனெனில் இலக்குவனோ தாயாதியாவான் குகனோ காட்டில் வாழும் வேடனாவான் இவர்கள் இருவரும் இந்த இராம பிரானுக்கு என்ன தீங்கு செய்ய நினைத்தோ இப்படித் திரிகின்றனர் என்ற ஐயமே! இங்ஙனம் ஐயுற்றுத் தனித்தனியே, கையும் வில்லுமாய்க் கொண்டு பெருமாளைக் காத்து நின்றனர் இங்கு "ஒரு நாள் முகத்திலே விழித்தவர்களையும் வடிவழகு படுத்தும்

பாடாயிற்று இது'' என்கிற ஸ்ரீவசன பூஷணத்தையும் அதற்கு மிக அழகாக வியாக்கியானம் வகுத்த விசதவாக் சிகாமணி களான ஸ்ரீமணவாள மாமுனிகளின் கருத்தையும் ஒருங்கே நோக்க வேண்டும்.

சீர்வசன பூடணம் பிள்ளைலோகாசாரியன் அருளிய அருமையான நூல். வைணவர்கள் பூண வேண்டிய செஞ் சொல் அணி. வைணவப் பேராசான்களின் கருத்துக் கருவூலம் திருமாமகளின் சீரருள் ஏற்றத்தையும் வெற்றியை யும் எடுத்தியம்பும் நூல். திருமால் திருவடி சேர்நிலையை ஆற்றுப்படுத்தும் ஆற்றுப்படை. அம்மெய்வழி ஒழுகினால் பெரும் பேரின்ப நிலையை பறைசாற்றும் பனுவல். அவ்வழி நீங்கினால் வரும் புன்மையை உணர்த்தும் எச்சரிக்கை ஏடு அம்மெய்வழி ஒழுகிய மிக்கோர் பெருமையைப் பரவும் பண்புடை நூல். பிள்ளைலோகாசாரியன் அளித்த வைணவ முரசு; வைணவச் சங்கு.

இத்தகு பெருமைமிகு நூலில் பிள்ளைலோகாச்சாரியர் மங்களாசாசனம் பண்ணுகையை இருநிலைகளில் வகுத்துக் காட்டுகிறார்.

ஞான நிலை அடைந்து, எம்பெருமான் கல்யாண குணங் களில் ஈடுபட்டு அவனைக் கடகாகக் கொண்டு தன்னை நோக்கு கின்ற நிலை ஒன்று மங்களங்களுக்கு இருப்பிடமானவனைப் பற்றி, அமங்களங்களைப் போக்கிக் கொண்டு, தன்னிடத்தே இல்லாத மங்களங்களைப் பெற்றுக் கொள்ளல் தட்டுமாறு நிலையாகும். இதுவே முதல் நிலை.

கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்கம் பொருந்திய அவ்வெம்பெருமான் பேரழகில் ஈடுபட்டு, கட்டுண்டு, வியந்து, அப்பேரழகனுக்கு யாதொரு தீங்கும் நேர்ந்து விடக் கூடாதே என்று உள்கலங்கி தன்னைக் கடகாகக் கொண்டு அவனை

நோக்குகிற நிலை இரண்டாம் நிலை. அவன் குணங்களை மறந்து, அவன் அழகால் ஈர்க்கப்பட்டு தடுமாறுகிற நிலையாகும். இந் நிலையில் தட்டுமாறிக் கிடக்கிறது.

இவ்விருவகை நிலைகளை விவரிக்கப் போந்த ஆசாரியன், இரண்டாம் நிலைக்கு எடுத்துக்காட்டாக இலக்குவன், குகன், வேடர்கள், எம்பெருமான் திறத்துக் காவல் புரிந்ததைக் கூறுகிறார்.

"இளையபெருமாளை ஸ்ரீ குகப்பெருமாள் அதிசங்கை பண்ண இருவரையும் அதிசங்கை பண்ணி ஸ்ரீ குகப்பெருமாள் பரிகரம் பெருமாளை நோக்கிற்றிறே" என்பது அத்திவ்ய வாக்கியம். இதற்கு கன்னலும் பாலும் தேனும் ஒத்த அழகிய வியாக்கியானத்தை மணவாளமாமுனிகள் அருளிச்செய் துள்ளார். இது கற்பதற்கும் சுவைப்பதற்கும் இனிமை பயப்பதே. இரசிக உள்ளங்களைக் கவர்ந்திழுக்கும் ஆற்றல் வாய்ந்தது. கவிஞன் கையாளும் தற்குறிப்பேற்ற அணியை, பிள்ளைலோகாசாரியன் உரை நடையில் கையாண்டு வெற்றி பெற்றிருக்கும் சீர்த்தி வெகுவாகப் போற்றத் தகுந்தது. மொத்தத்தில் சுவைஞர்களுக்கு, இது ஒரு கவின் மிகு கற்பனைச் சுரங்கம்.

ஆனால் இதைக் கம்பன் பாடலுடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுதுதான் மனம் வேதனைக்குள்ளாகிறது. அன்புத் தம்பி இலக்குவனின் பாத்திரப் பாங்கையும் குகனின் கரைகாணாக் காதலையும் இது சீர்குலைக்க முயல்கிறது. இளையபெருமாள் என்றும் குகப்பெருமாள் என்றும் நம் பூர்வர்களால் ஏற்றம் பெற்ற பாத்திரங்களின் தகுதிகள் குன்றிவிடுமோ என்ற ஐயம் ஏற்படுகிறது.

இனி, கம்பனிடம் வருவோம். இராமனும் சீதையும் கல்லணையில் கண்துயில, இலக்குவன், குகன், வேடர்கள் காவல் புரிவதைக் கம்பன் உணர்த்துகிறான்.

"தும்பியின் குழாத்திற் சுற்றுஞ் சுற்றத்தன் தொடுத்த
வில்லன்;
வெம்பி வெந்தழியா நின்ற நெஞ்சினன்; விழித்த
கண்ணன்
தம்பி நின்றானை நோக்கித் தலைமகன் தன்மை நோக்கி
அம்பியின் தலைவன் கண்ணீர் அருவி சோர்
குன்றினன்"

—என்பது பாடல்.

அயோத்தி அந்தப்புரத்தில் துணைவியோடு மெத்தென்ற பஞ்ச சயனத்தில் கண் துயில வேண்டிய காகுத்தன், கல்லணையில் கண்துயிலும், காலத்தின் கொடுமையை எண்ணி எண்ணி நைகிறது குகனின் தாயுள்ளம். அன்புத் தம்பி நிழலாக நின்று அடிமைத்திறம் காட்டுவதைக் கண்டு குகன் மேலும் கலங்குகிறான். கண்களில் நீர் அருவியாகச் சொரிய காவல் புரிகிறான் அவன் தொண்டர்களும் காவல் செய்கின்றனர். இதுதான் இப்பாடலின் திரண்ட கருத்து.

இப்பாடலுக்கு சிர்வசனபூடணத்தை விளக்கமாகவும் ஒப்பு நோக்காகவும் கொள்வதை நுண்ணறிவாளர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். யார் மீதும் யாரும் ஐயம் கொண்டதாக இப்பாடலில் பொருள் காண இடமே இல்லை. 'தலைமகன் தனிமை நோக்கி' என்ற பாடம் ஒன்று உண்டு. தலைமகன் தன்மை நோக்கி என்பதே கம்பன்பால் ஆழங்கால் பட்ட புலவர் பெருமக்கள் ஏற்றுக் கொண்ட தலையாய பாடம் ஆகும். தலைமகன் தனிமையில் இலன். துணைவியுடன் துயில் கொள்கிறான். இளையகோவோ உடனேகிக் காவல் புரிகிறான். இந்நிலையில் தலைமகன் தனிமை நோக்கி என்பது எங்ஙனம் பொருந்தும்? தலைமகன் தன்மை நோக்கி என்ற பாடத்தை ஏற்றுக்கொண்டால் மயக்கம் ஏற்பட சிறிதும் இடம் இல்லை.

காவியப்போக்கில், குகன் இலக்குவன் மீது ஐயம் கொண்டான் என்றோ, குகன் மீது வேடர்கள் ஐயுற்றார்கள் என்றோ காட்டமுடியாது. இலக்குவனால் இராமனுக்குத் தீங்கு நேரலாம் என்று கிஞ்சித்தும் குகன் எண்ணியதே இல்லை. மாறாக குகன், இலக்குவன் அண்ணனுக்கு அடியனாக நின்று காவல் செய்த திறத்தைப் பரதனிடம் கூறுவதை—

''அல்லையாண்டமைந்த மேனி யழகனும் அவளுந்துஞ்ச
* * * * * * ''இமைப்பிலன் நயனம்என்றான்''

என்ற பாட்டால் அறியலாம்.

இராமன் தம்பியரனைவரும் அறம் அல்லாதன செய்யார் என்ற கொள்கையுடையவன் குகன். ''எம்பெருமான் பின் பிறந்தார் இழைப்பாரோ பிழைப்பு'' என்று வியந்தோதும் குகன், இலக்குவனை ஐயுற்றான் என்பது காவியப் போக்கிற்கும் நோக்கிற்கும் பொருந்தாதல்லவா!

இலக்குவன், குகனை ''தாயின் நல்லான்'' என்றும் ''நிமிர்ந்த கூட்டச் சுற்றமுந் தானும் உள்ளந் தூயன்'' என்றும் இராமனிடம் அறிமுகம் செய்து வைப்பான். என்றால் வீணான ஐயங்கள் ஏற்பட்டதாகக் கற்பிக்க இடம் ஏது? சிந்திக்க வேண்டும்.

இராமன் கொண்ட தோழமைகளிலேயே குகனுடன் கொண்ட தோழமையே சிறப்புடையது என்கிறார் ஆழ்வார்.

''கூர் அணிந்த வேல் வலவன் குகனோடும் கங்கை தன்னில்
சீரணிந்த தோழமை கொண்டதுவும்'' —என்பார்.

பட்டாபிஷேகம் ஆன பிறகு வழியனுப்புகிற கட்டத்தில் குகனை நோக்கி 'மருவரு துணைவ' என்கிறான் இராமன். கம்பனாலும், கம்பனின் பாத்திரங்களாலும், ஆழ்வார்களாலும் மாசு மருவற்றவனாகக் காட்டப்பட்ட குகனை வீணான சந்தேகங்கள் உடையவனாகக் காட்ட நாம் ஏன் முயலவேண்டும்?

சீர்வசன பூடணம் தனியே சுவைத்து மகிழ்ந்து ஓழுக வேண்டிய நன்னூல். கம்பன் பாடலுக்கு அது வியாக்கியானம் அல்ல. கம்பன் பாடலோடு ஒப்பிட்டு ரசிக்க வேண்டியதும் இல்லை. அதன் நோக்கும் போக்கும் வேறு. ஒன்று சர்க்கரைப் பொங்கல் என்றால் மற்றொன்று திருக்கண்ணமுது. இரண்டையும் தனித்தனியே அநுபவித்து மகிழ்வோம்.

(16ம் பக்கம் தொடர்ச்சி)

சரி குழந்தைகளே, இனி கதைக்கு வருவோம். மதுர கவிகள் நம்மாழ்வாரை தனது குருவாக ஏற்று, அவருக்கு எல்லாவித கைங்கர்யங்களையும் (உதவி) செய்து வந்தார். ஒவ்வொரு ஊரிலும் கோயில் கொண்டுள்ள எம்பெருமான்களும், நம்மாழ்வாருக்கு ஸேவை சாதிக்க, நம்மாழ்வாரும் எம்பெருமானின் குணாதிசயங்கள் பற்றி வேதங்களின் சாரமாக 4 திவ்யப் பிரபந்தங்கள் பாடினார். ருக் வேதத்தின் சாரமாக 'திருவிருத்தம்' (100 பாட்டு), யஜுர் வேதத்தின் சாரமாக 'திருவாசிரியம்' (7) அதர்வண வேதத்தின் சாரமாக 'பெரிய திருவந்தாதி' (87), சாம வேத சாரமாக 'திருவாய்மொழி' (1084) ஆகியவையே அவை. இவ்வுலகில் 35 ஆண்டுகள் வாழ்ந்திருந்து முடிவில் திருநாடு (மோக்ஷம்) அடைந்தார்.

**பராங்குசன் :** மாமா அவருடைய பாசுரங்களில் முக்யமான ஏதாவது ஒன்றைக் கூறுங்களேன்.

**சி. மாமா :** அப்படிக் கேளடா என் ராஜா, திருவாய்மொழியில் ஒரு பாசுரத்தில் பகவானை நோக்கி, "களைவாய் துன்பம் களையா தொழிவாய் களைகண் மற்றிலேன்" என்கிறார். அதாவது என் கஷ்டங்களையெல்லாம் நீ போக்கினாலும் சரி, போக்காவிட்டாலும் சரி, எனக்கு உன்னைத் தவிர வேறு கதி கிடையாது என்கிறார்.

**ஆண்டாள் :** நம் ஆத்தில் கூட நமக்கு வேண்டிய பொருளை நம அம்மா வாங்கிக் கொடுத்தாலும் சரி, வாங்கிக் கொடுக்கா விட்டாலும் சரி, அம்மாவை விட்டால் நமக்கு வேறு யார் இருக்கிறார்கள். அது போலத்தானே நம்மாழ்வாரும் பகவானைச் சொன்னார் மாமா?

**சி. மாமா :** சரியாகச் சொன்னாயடி என் ராஜாத்தி, நீங்களும் நம்மாழ்வாரைப் போலவே பகவானிடத்தில் அன்பு செலுத்த முயலுங்கள். உலகத்தின் நன்மைக்காக நம்மாழ்வார் பத்துப் பாசுரங்கள அருளிச் செய்திருக்கிறார். அப்பாசுரங்களை தினமும் நாம பாடினால் நமக்கு ஒருவித துன்பமும் வராது.

**ஆண்டாள் :** சிதாசாரியன் ராசி பலனில் கூட வருமே! "ஆழிஎழ" என்ற பாசுரம் தானே அது?

**சி. மாமா :** ஆமாம் அதேதான். இப்போது என்னுடன் சேர்ந்து எல்லோரும் சொல்லுங்கள். *

# எமது மேல் நாட்டு விஜயம்

என்ன திகைக்கிறீர்கள்! இது ஏதடா இவர் எப்பொழுது மேல் நாட்டுக்கு விஜயம் செய்தார் என்றுதானே வியப்புறுகிறீர்கள்! நான் விஜயம் செய்த மேல்நாடு கர்நாடக மாநிலத்திலுள்ள மேல் கோட்டை எனப்படும் திருநாராயணபுரம் தான். இதை மேல்நாடு என்று அழைப்பது நம்மவா வழக்கம். ஸ்ரீராமாநுஜர் ஒரு சமயம் இங்கு எழுந்தருளிய போது அவர் மேல்நாட்டுக்கு எழுந்தருளினர் என்றுதான் பண்டை நூல்கள் குறிப்பிடுகின்றன.

---

## M. A. வேங்கடகிருஷ்ணன், M.A.

---

ஒருசமயம் ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீராமாநுஜர் எழுந்தருளியிருந்த போது தீவிரச் சைவனான சோழவரசனுடைய உபத்ரவம் தாளாமல் ஸ்ரீரங்கத்தை விட்டு வெளியேறினர். பிறகு கர்நாடக மாநிலத்திலுள்ள மேலக்கோட்டைக்கு எழுந்தருளினர். அங்கு திருநாராயணன் விக்ரஹத்தைக் கண்டெடுத்து கோயில்கட்டி பரதிஷ்டை செய்தார். பிறகு டெல்லி பாதுஷாவிடமிருந்து செல்வப்பிள்ளையை மீட்டு வந்து பிரதிஷ்டை செய்தார், பிறகு ஊருக்கும் திருநாரயணபுரம என்று பெயரிட்டு ஊரையும் திருத்திப் பன்னிரண்டு ஆண்டுகள் அங்கேயே வாழ்ந்திருந்தார் அப்பேற்பட்ட பூமியில் ஸ்ரீராமாநுஜருக்குப் பத்து நாட்கள் உத்ஸவம் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. இவ்வுத்ஸவத்தை மிகச் சிறப்பாகக் கொண்டாட 1879ல் விவேகோல்லாஸினி ஸபா என்றொரு சபையை ஸ்ரீ உ. வே. மண்டபம் ஆழ்வார் ஸ்வாமி நிறுவினர். கடந்த ஒரு நூற்றாண்டுகாலமாக இவ்வுத்ஸவத்தை மிகச் சிறப்பாக நடத்தி வருவதோடல்லாமல் உபய வேதாந்த வித்வான்கள் பலரையும் தயாரித்திருக்கிறது. இச்சபைக்கு இது நூறுவது ஆண்டு. இதை மிகவும் சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்று சபையின் நிர்வாகத்தினர் தீர்மானித்தனர். இச்சிறப்பு விழாவுக்கு கண்டிப்பாக வர வேண்டும் என்று எமக்கும் அழைப்பு விடுத்திருந்தனர்.

அதன்படி நானும் திரு. P.T. விஜயராகவனும் 17-4-80 அன்று இரவு கிளம்பி மறுநாள் காலை மைசூர் சேர்ந்தோம். அன்று மைசூரிலேயே தங்கிவிட்டு மறுநாள் காலை (பஸ்ஸில்) திருநாராயணபுரம் சேர்ந்தோம்.

தமிழகத்திற்கு மேற்கே உள்ள பிரதேசம் ஆகையால் இதை மேல்நாடு என்று அழைக்கின்றனர் என்றுதான் இது நாள்வரை எண்ணியிருந்தேன். ஆனால் எல்ல வகையிலும் இது மேலான நாடு என்பதால்தான் மேல்நாடு என்று அழைக்கின்றனர் என்பதை நேரில் சென்றதும் புரிந்து கொண்டேன். அவ்வளவு புனிதம்; அவ்வளவு விலக்ஷணம்.

நாங்கள் அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு கோயிலுக்குச் சென்றபோது (சுமார் 11 மணிக்கு) உடையவர் திருத்தேருக்கு எழுந்தருளிக் கொண்டிருந்தார். ஆஹா என்ன அற்புதமான காட்சி! சுமார் முந்நூறு ஸ்ரீ வைஷ்ணவர்கள் புடைசூழ உடையவர் எழுந்தருளியது கண்கொள்ளாக் காட்சி. பெங்களூரிலிருந்தும், மைசூரிலிருந்தும், மற்றும் பல இடங்களிலிருந்தும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் திரளாக வந்திருந்தனர். திருநாராயணபுரம் ஸ்ரீவைஷ்ணவர்கள் சிவந்த நெடிய திருமேனியுடனும், சிகை (குடுமி)யுடனும், மிக அழகிய பன்னிரு திருமண்காப்புகளுடனும் ஒவ்வொருவரும் ஸ்ரீராமானுஜர் இன்று எழுந்தருளியிருந்தால் எப்படி இருப்பாரோ அப்படியே காட்சியளித்தனர். மூன்று, நான்கு வயது சிறுவர்கள்கூட அழகிய குடுமியுடனும் திருமண்காப்புகளுடனும் மிக அழகாக விலக்ஷணமாக இருந்தது இங்கு மட்டுமே காணக் கூடிய காட்சி. உடையவர் தேரில் எழுந்தருளியவுடன் பெரிய திருமடல் கோஷ்டி. பிறகு தேர் இழுக்கும் படலம். எல்லாவற்றையும்விட அதிசயமான காட்சியை இப்பொழுதுதான் கண்டோம். தேரை வீதியில் இழுத்தவர்கள் அனைவரும் பெண்களே! ஒன்பது கஜம் (மடிசார்) புடவைகள் சரசரக்க பெண்களே தேரை இழுத்தது மிகவும் வியக்கத்தக்க காட்சியாக இருந்தது. (ஆண்கள் இழுக்கவே இல்லை என்று சொல்ல

வில்லை, ஒரு சில ஆண்களும் தேரை இழுத்தனர்). தேர் மாட வீதிகளின் வழியே நிலை வந்துசேர இரண்டு மணிகாலம் ஆயிற்று. இதில் மற்றொரு வியப்பு என்னவென்றால் உடைய வர் ஸன்னிதி சேர்ந்து தீர்த்தம் ஸாதிக்கும் வரை அதாவது பிற்பகல் 2 மணிவரை அவ்வூர்க் குழந்தைகள்கூட உண்ப தில்லை. பிற்பகல் சுமார் இரண்டுமணிக்கு கோயிலைச் சுற்றி யுள்ள பிரகாரத்தில் அனைவருக்கும் ததியாராதனை. இங்கு தான் ஸ்ரீ ராமானுஜருடைய ஏற்பாடு இன்றும் அமுல் நடத் தப்படுவதைக் கண்டோம். ஏழை பணக்காரர் என்ற வித்யாச மின்றி, சாதிமத வேறுபாடின்றி அனைவரும் ஒரே பந்தியில் அமர்ந்து சமமாக உண்பதைக் கண்டோம்.

விவேகோல்லாஸினி ஸபையார் உடையவர் உத்ஸவத் தைக் கொண்டாடுவதோடு நின்றுவிடவில்லை. மிகவும் புதுமையான முறையில் பல்சுவை நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்திருந்தனர். தினமும் இரவு நேரத்தில் நாட்டியம், நாடகம், ஹரிகதை போன்ற பல நிகழ்ச்சிகளும் அதில் இடம் பெற்றன. நாங்கள் சென்றிருந்தது ஒன்பதாம் திருநாள். அன்று இரவு சுமார் 10 மணிக்கு கலை நிகழ்சசிகள் ஆரம்ப மாயின. முதலில் அஷ்ட லக்ஷ்மியைப் பற்றி ஒரு காட்சியுடன் விழா மங்களகரமாகத் துவங்கியது. பிறகு பீபீ நாச்சியார் வரலாறு நாடகமாக நடிக்கப்பட்டது தென்னாட்டைக் கொள்ளையடிக்க வந்த முகம்மதிய சுல்தான் கோயில் விக்ரகங் களைக் கவர்ந்துகொண்டு டெல்லி சென்றுவிடுகிறான். அவனுடைய மகள் அவ்விக்ரகங்களிடையே செல்வப்பிள்ளை யினுடைய விக்ரகத்தைக் கண்டு, காதல் கொண்டு, தன் னுடன் அந்தப்புரத்திற்கு எடுத்துச் சென்று விடுகிறாள். தனக்கு ஊணும் உறக்கமும் அவனே என்று கொள்கின்றாள். தந்தை சுல்தான் அவளுக்கு மணம்பேச முற்பட்டபோது, தான் செல்வப்பிள்ளையையே மணக்கப்போவதாகக் கூறு கிறாள். விக்ரஹ ஆராதனையை வெறுக்கும் முகம்மதிய சுல்தான், தன் மகள் ஒரு விக்ரகத்தின் மேல் கொண்டுள்ள

காதலைப் புரிந்து கொள்ள முடியாமல் திகைக்கிறான். இந் நிலையில்தான் ஸ்ரீ ராமாநுஜர் மேல்கோட்டைக்கு எழுந்தருளி யிருக்கிறார். திருநாராயணன் (மூலவர்) விக்ரஹத்தைக் கண் டெடுத்த அவர், செல்வப்பிள்ளையின் (உத்ஸவர்) விக்ரஹத்தை யும் கண்டுபிடிக்க முயல்கிறார். சுல்தானிடம் விக்ரகம் இருப்ப தறிந்து டெல்லிக்குச் சென்று சுல்தானிடம் கேட்கிறார். உடையவரின் தெய்விகத் தோற்றத்தைக் கண்டு மயங்கிய சுல்தான், "நீர் அழைத்து, அந்த விக்ரகம் உம்மிடம் வந்தால் அழைத்துப் போம்" என்கிறான். உடையவரும் உள்ளமுருக செல்வப் பிள்ளையை அழைக்க, ஒரு சிறு குழந்தையாக ஓடி வந்து உடையவர் மடியில் வந்து உட்கார்கிறான். உடைய வரும் அவனை திருநாராயணபுரத்திற்கு அழைத்துச் செல்கிறார். பின்னால் விவரமறிந்த சுல்தான் மகள் செல்வனைப் பிரிய முடியாமல் அவனைத் தேடிச் செல்கிறாள். முடிவில் திரு நாராயணபுரத்தில் அவனைக் கண்டு அவன் திருவடிகளில் விழுந்து ஐக்யமாகிவிடுகிறாள். இதுதான் பீபீ நாச்சியார் நாடகத்தின் கதை.

இதில் நடித்தவர்கள் அனைவரும் மிகச் சிறப்பாக நடித்தனர். குறிப்பாக பீபிநாச்சியாராக நடித்தவர் மிகவும் உருக்கமாக நடித்தார். நடித்தார் என்று சொல்வதைவிட அந்தப்பாத்திரமாகவே மாறிவிட்டார் என்றுதான் சொல்ல வேண்டும். இந்நாடகத்தில் ஒரு சிறப்பு அம்சம் இது ஒரு தமிழ் நாடகம் என்பதே. தமிழ் தெரியாத நடிகைகளும் நடிகர் களும் தமிழ் வசனங்களை கன்னட எழுத்தில் எழுதிவைத்துக் கொண்டும் மனப்பாடம் செய்தும் நாடகத்தை நடத்தியது கண்டு வியப்படைந்தேன். நமது ஸம்ப்ரதாயத்தின் மீதும், தமிழ் மீதும் அவர்களுக்குள்ள அளவில்லாத ஈடுபாடும் உற்சாகமும் சொல்லி முடியாது. இந்நாடகத்திற்குப் பிறகு திருமழிசை ஆழ்வார் பற்றி ஒரு கன்னட நாடகம் சிறப்பான முறையில் நடை பெற்றது.

இதற்கு முந்தயதினம் "திருவாய்மொழி அரையர்" என்றொரு கன்னட நாடகம் நடந்ததாம். [அதை பார்க்கும் பாக்யம் எனக்குக் கிட்டவில்லை ஸ்ரீதாசார்யனின் சாண்டில்யன் எழுதி வெளிவந்த "அவன் உகக்கும் ரஸம்" என்ற சிறு கதையைத்தான் அவர்கள் மிகவும் சிறப்பாக ஹாஸ்யரஸம் கலந்து **திருவாய்மொழி அரையர்** என்ற நாடகமாக்கி யிருந்தனர். இதன் மற்றொரு சிறப்பு அம்சம் இதில் நடித்த வர்கள் அனைவரும் 10 வயதுக்குட்பட்ட சிறுவர்கள். முதல் நாள் பார்க்க முடியாமல் போய்விட்ட வருத்தத்தைத் தீர்க்க ஸபையின் செயலாளர் ஸ்ரீ உ,வே. லக்ஷ்மீதாததாசாரியர் எங்களுக்காகவே மீண்டும் ஒரு முறை அந்நாடகத்தை நடித்துக்காட்டச் செய்தார். சிறுவர்கள் நடிக்கும் அழகிற்கும், அவர்கள் அக்கதையை நகைச்சுவையுடன் கலந்து நாடகமாக்கி யிருக்கும் அழகிற்கும் கண்டிப்பாக ஒரு த்ருஷ்டி சுற்றிப்போட வேண்டும்; அவ்வளவு அருமை. மறுநாள் (ஒப்பனை இல்லாமல்) நாடகம் பார்த்தவுடன் முந்தயதினம் (ஒப்பனையுடன்) நடந்த நாடகத்தைப் பாரீக்காமல் போய் விட்டோமே என்ற வருத்தம் மேலும் அதிகரித்தது. இக்கதையை நாடகமாக்கிய திருமதி கோதா அவர்களுக்கும், திரு. ஐக்கு நாராயணாசார் அவர்களுக்கும், சிறுவர்களை வைத்துக் கொண்டு இந் நாடகத்தை இவ்வளவு திறமையாக இயக்கிய திருமதி மாலதி சிங்கராசார் அவர்களுக்கும் நமது சிறப்புப் பாராட்டுக்கள்.

20-4-80 அன்று உடையவர் சாற்றுமுறை, காலை திருவீதிப் புறப்பாடு, திருமஞ்சனம், ஸேவை, சாற்று முறை. மாலை புறப்பாடு, தசாவதார உத்ஸவம், திருவாய்மொழி ஸேவை சாற்று முறை என்று மறுநாள் காலை 5மணி வரை உத்ஸவங்கள் விடிய விடிய நடந்து கொண்டே இருந்தன.

மாலை 4 மணிக்கு ஸ்ரீ உ. வே. வேளுக்குடி வரதாசாரியர் ஸ்வாமி உபய வேதாந்தங்கள் பற்றிய உபந்யாஸ மழையைப் பொழிந்தார்.

இரண்டு நாட்கள் போனதே தெரியவில்லை. இப்படிப் பட்ட ஒரு பூமியில் ஒரு இரண்டுநாளாவது வசித்து மகிழும் பேறு நமக்கு வாய்ந்தது அதிருஷ்டமே ஸ்ரீராமாநுஜர் கடைசியாக அருளிய ஆறுவார்த்தைகளுள் ஒன்று "இரு நாராயணபுரத்தில் ஒரு குடிசையாவது கட்டிக்கொண்டு நித்தியவாசம் செய்யுங்கள் என்பது ஒன்று. விவேகோல்லாஸினி சபா இப்படிப்பட்ட வைபவங்களை நிரந்தரமாக நடத்து மாறுள்ளம் பெருமானுருடைய கட்டளையை கண்டிப்பாக ஒவ்வொருவரும் நிறைவேற்றுவர் என்பதில்ஐயமில்லை.

இவ்வளவு நிகழ்ச்சிகளையும், பம்பரமாகச் சுழன்று மிகச் சிறந்த முறையில் நடத்திய சபையின் செயலாளர் ஸ்ரீ உ.வே. M.A. லக்ஷ்மீதாதாசார்யர் அவர்களுக்கு எங்களது மனமார்ந்த பாராட்டுக்களைச் சமர்ப்பிக்கிறோம்.

---


Anything & Everything in
Real Estates
(Buying & Selling properties)
Civil Constructions
Please Contact

**MINERVA ENTERPRISES**

2, Narayanan Street,
Mahalingapuram,
Nungambakkam, MADRAS-600 034.